Registered as a Newspaper
பக்கங்கள் - 16+8
விலை - ரூபா 60

# உதயன்

சுடர் : 39 | கதிர் : 301
ஞாயிற்றுக்கிழமை 22 செப்ரெம்பர் 2024
புரட்டாதி 06 ஆம்

முச்சந்தி முரளி



"மாற்றம் வரப்போகுதெண்டு சிக்னல் வருகுது, ஆனால் மாற்றமே பின்னொரு காலத்தில ஏமாற்றமா மாறக்கூடாது கண்டியளோ"



## ஜனாதிபதித் தேர்தல்

# தபால் வாக்குகள்: அநுர முன்னிலை!

### இரண்டாம் இடத்தில் ரணில்; சஜித்துக்கு மூன்றாமிடமே

**கொழும்பு, செப்ரெம்பர் 22**
**ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலின் தபால்மூல வாக்களிப்பில் நேற்று அதிகாலை 3 மணிவரை வெளியான தகவல்களின் அடிப்படையில் அநுரகுமார திஸாநாயக்க மிகப்பெரும் முன்னிலை பெற்றுள்ளார்.**

14

**முழுமையான தேர்தல் முடிவுகளை**
**சுடச் சுடத் தாங்கியவாறு உதயன் - விசேட பதிப்பு**
**இன்றுமாலை வெளியாகும் பிரதிகளுக்கு முந்துங்கள்**



## நெடுந்தீவு ஹெலிகொப்டரில் பறந்துவந்த வாக்குப்பெட்டி!

யாழ்ப்பாணம், செப். 22
யாழ்ப்பாணம் , நெடுந்தீவு வாக்களிப்பு நிலையங்களில் இருந்து வாக்குச் சீட்டுகள் ஹெலிகொப்டர் மூலமாக வாக்கெண்ணும் நிலையத்துக்கு (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு) எடுத்து வரப்பட்டன. தரைவழியாக வாக்குச் சீட்டுகளை எடுத்துவரும்போது ஏற்படும் தாமதங்களைக் கருத்திற்கொண்டே ஹெலிகொப்டர் மூலமாக எடுத்துவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## நேற்றிரவு முதல் ஊரடங்கு!

கொழும்பு, செப் 22
இலங்கை முழுவதும் நேற்றிரவு 10 மணிமுதல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிவரை ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக விசேட வர்த்தமானி உத்தரவொன்றை ஜனாதிபதி ரணில் பிறப்பித்துள்ளார். இதனால் மக்களிடையே பெரும் பதற்றநிலை நேற்றிரவு ஏற்பட்டது. இரவிரவாக மக்கள் பெற்றோல் மற்றும் அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் மும்முரமாக ஈடுபட்டனர். எனினும் வாக்கெண்ணும்

14

## வாக்குச் சீட்டைக் கிழித்த இளைஞர் யாழில் கைது!

யாழ்ப்பாணம், செப். 22
வாக்குச் சீட்டைக் கிழித்த குற்றச்சாட்டில், இளைஞர் ஒருவர் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

14



## சட்டம் - ஒழுங்கைப் பேணவே ஊரடங்கு நடைமுறைக்கு!

கொழும்பு, செப்.22
இலங்கை முழுதும் நேற்றிரவு 10 மணிமுதல் இன்று காலை 6 மணிவரை ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளமை நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலை

14

## யாழ்ப்பாணத்தில் நேற்று 65.9 வீத வாக்களிப்பு!

யாழ்ப்பாணம், செப். 22
ஜனாதிபதித் தேர்தலின்போது யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 65.9 வீதமான வாக்களிப்பு பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

14

## உச்சக்கட்ட பாதுகாப்புக்குள் கொழும்பு விமான நிலையம்

கொழும்பு, செப். 22
ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் நேற்று அறிவிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது, கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

14

## நாளை விசேட அரச விடுமுறை

கொழும்பு, செப். 22
இலங்கையில் நாளைய தினம் அரச விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

14

## முல்லைத்தீவில் நேற்று இராணுவம் வீதித்தடை

முல்லைத்தீவு, செப். 22
ஜனாதிபதித் தேர்தல் வாக்குகள் எண்ணப்பட்டுக் கொண்டிருந்த நிலையில், முல்லைத்தீவில் நேற்று இரவு இராணுவத்தால் வீதித்தடைகள் போடப்பட்டன.
நேற்று இரவு 9 மணியளவில் ஊரடங்கு நடைமுறைக்கு வருவதாக உத்தரவிடப்பட்டது. இந்த உத்தரவு வருவதற்கு சில மணிநேரங்களுக்கு முன்னதாகவே முல்லைத்தீவு -

14

சஞ்சீவி

மக்கள் ... தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் 2024

## தபால் மூல வாக்களிப்பு முடிவுகள்

### வன்னி

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | 4,899 |
| ரணில் விக்கிரமசிங்க | 4,257 |
| அநுரகுமார திஸாநாயக்க | 2,092 |
| அரியநேந்திரன் | 1,160 |
| நாமல் ராஜபக்ச | 68 |

### மட்டக்களப்பு

| | |
|---|---|
| ரணில் விக்கிரமசிங்க | 5,967 |
| சஜித் பிரேமதாஸ | 3,205 |
| அநுரகுமார திஸாநாயக்க | 2,479 |
| அரியநேந்திரன் | 901 |
| நாமல் ராஜபக்ச | 19 |

### மாத்தளை

| | |
|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | 12,186 |
| ரணில் விக்கிரமசிங்க | 4,243 |
| சஜித் பிரேமதாஸ | 3,816 |
| நாமல் ராஜபக்ச | 372 |
| அரியநேந்திரன் | 03 |

### அநுராதபுரம்

| | |
|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | 32,750 |
| சஜித் பிரேமதாஸ | 10,956 |
| ரணில் விக்கிரமசிங்க | 8,218 |
| நாமல் ராஜபக்ச | 783 |
| அரியநேந்திரன் | 11 |

### மொனராகலை

| | |
|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | 14,050 |
| ரணில் விக்கிரமசிங்க | 3,401 |
| சஜித் பிரேமதாஸ | 5,733 |
| நாமல் ராஜபக்ச | 470 |
| அரியநேந்திரன் | 03 |

### திருகோணமலை

| | |
|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | 5,480 |
| சஜித் பிரேமதாஸ | 4,537 |
| ரணில் விக்கிரமசிங்க | 3,630 |
| நாமல் ராஜபக்ச | 129 |
| அரியநேந்திரன் | 431 |

### கொழும்பு

| | |
|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | 20,864 |
| ரணில் விக்கிரமசிங்க | 7,645 |
| சஜித் பிரேமதாஸ | 4,080 |
| நாமல் ராஜபக்ச | 561 |
| அரியநேந்திரன் | 63 |

### கேகாலை

| | |
|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | 20,062 |
| ரணில் விக்கிரமசிங்க | 7,229 |
| சஜித் பிரேமதாஸ | 5,604 |
| நாமல் ராஜபக்ச | 482 |
| அரியநேந்திரன் | 07 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியான முறையில் வெற்றியை கொண்டாடுக

## ஜனாதிபதி வேட்பாளர்கள் கோரிக்கை

**கொழும்பு, செப். 22**

**தேர்தல் வெற்றியை அமைதியான முறையில் கொண்டாட வேண்டும் என்று ஜனாதிபதி வேட்பாளர்கள் பொதுமக்களிடம் வலியுறுத்தியுள்ளனர்.**

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெடுப்பின் பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

**ஜனாதிபதி ரணில்**

வாக்களித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'எனக்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வாக்களிப்புக்கான வரிசையை நானே தோற்றுவித்தேன். அன்றைய உறுதியற்ற நிலை நீடித்திருந்தால் வாக்களிப்பு இடம்பெற்றிருக்காது.

அமைதியான முறையில் தேர்தல் இடம்பெற்றது. புதிய பயணத்தை நோக்கி செல்வோம். வன்முறையற்ற வகையில் அமைதியாக செயற்படுங்கள். போட்டியிட்ட வேட்பாளர்களுக்கும், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

**சஜித் பிரேமதாஸ**

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ வாக்களித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

ஜனநாயக முறையில் தேர்தல் இடம்பெற்றது. ஆகவே ஜனநாயக அம்சங்களை பாதுகாக்க வேண்டியது அவசியமானது. வெற்றியை அமைதியான முறையில் கொண்டாடுங்கள். வன்முறையற்ற சூழலை தோற்றுவிக்கும் பொறுப்பு அனைத்து அரசியல் தரப்பினருக்கும் உண்டு என்றார்.

**அநுரகுமார திஸாநாயக்க**

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க வாக்களித்ததன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், இலங்கை அரசியல் வரலாற்றை மாற்றியமைக்கும் தேர்தலாக இந்தத் தேர்தல் காணப்பட்டது. இலங்கையில் காலம் காலமாக அரசாங்கத்தையும், ஆட்சியாளர்களையும் மாற்றுவதற்கு தேர்தல் இடம்பெற்றுள்ளது.

இந்த தேர்தல்தான் முறைமை மாற்றத்துக்காக இடம்பெற்றுள்ளது. வெற்றியை அனைவரும் அமைதியான முறையில் கொண்டாட வேண்டும். ஜனநாயக ரீதியில் தமது விருப்பும் அரசியல் தரப்பினருக்காக செயற்படவும், வாக்களிக்கவும் அனைவருக்கும் உண்டு. அதனை பாதுகாக்க வேண்டும். நாட்டுக்கு புதிய அரசியல் கலாச்சாரம் அவசியம். வெற்றி யாருடையதாக இருந்தாலும் அதனை அமைதியாகவும், வன்முறையற்ற வகையிலும் கொண்டாட வேண்டும் என்றார்.

**நாமல் ராஜபக்ச**

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச வாக்களித்தன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையில், 'யாருக்கு அதிகாரத்தை வழங்க வேண்டும் என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும். மக்களாணையை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அமைதியான முறையில் வெற்றியை கொண்டாட வேண்டும்' என்றார்.

(ம)

# வயோதிபப் பெண் தீயில் எரிந்து பலி

## நீர்வேலியில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 22

தனிமையில் வசித்து வந்த மூதாட்டியொருவர் தீயில் முற்றாக எரிந்த நிலையில், நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பரயோகஜெயம் சரஸ்வதி (வயது - 65) என்ற மூதாட்டியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். சடலம் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்ட நிலையில் சம்பவ இடத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

எரிவாயு சிலிண்டர் வெடித்ததால் ஏற்பட்ட தீ விபத்தால் மூதாட்டி உயிரிழந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. சம்பவ இடத்துக்கு அருகில் மிளகாய்த் தூள் கொட்டப்பட்டுள்ளமையும் பொலிஸாரால் அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால், தடயவியல் பொலிஸாரும் சம்பவ இடத்துக்கு அழைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-20-26,27)

# விபத்தில் காயமடைந்த குடும்பத்தலைவர் சாவு!

யாழ்ப்பாணம், செப். 22

யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயம் அடைந்த குடும்பத்தலைவர் மூன்று வாரங்களின் பின்னர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி தனங்கிளப்பைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான நந்தகுமார் செந்தூரன் (வயது - 41) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கோயிலாக்கண்டிப் பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றை நடத்திவரும் அவர் கடந்த மாதம் 26ஆம் திகதி சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது பேருந்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியிருந்தார். மயக்கமடைந்த நிலையில் மீட்கப்பட்ட அவர், சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில், சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை சாவகச்சேரிப் பொலிஸார் நெறிப்படுத்தினர். (அ-ம-100)

# விபத்தில் இளைஞர் இறப்பு!

கிளிநொச்சி மின்சார சபைக்கு முன்பாக மோட்டார்சைக்கிள், பட்டாரக வாகனம் மோதி விபத்துக்குள் ளான தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி சாந்தபுரத்தைச் சேர்ந்த ஜெயக்குமார் கவிதரன் (வயது- 30) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் கிளிநொச்சி மின்சார சபைக்கு முன்பாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை கிளிநொச்சி பொலிஸார் நெறிப்படுத்தினார்கள்.

(அ-ம-100)

போதனா மருத்துவமனையின்

# நான்காம் மாடியிலிருந்து தவறிவீழ்ந்த யுவதி பலி

யாழ்ப்பாணம், செப். 22

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் நான்காம் மாடியில் இருந்து தவறி வீழ்ந்த யுவதியொருவர், சிகிச்சையின் போது உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் திருநகர் பகுதியைச் சேர்ந்த செல்வராஜா றெஜினி (வயது– 19) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். கடந்த மாதம் 31ஆம் திகதி நான்காம் மாடியில் இருந்து அவர் தவறி வீழ்ந்த நிலையில், நேற்றுமுன்தினம் மாலை சிகிச்சையின் போது உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை யாழ்ப்பாணப் பொலிஸார் நெறிப்படுத்தினர். (அ-ம-100)

தேர்தல் கடமையில்

# பொலிஸ் சாவு

பொலனறுவை புலஸ்திபுர விஜித ஆரம்ப பாடசாலையின் வாக்களிப்பு நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் திடீர் சுகவீனம் காரணமாக நேற்றுப் பிற்பகல் உயிரிழந்துள்ளார். (அ-சி)

நெடுந்தீவுக் கடலில் அத்துமீறல்

# இந்திய மீனவர்கள் 37 பேர் கைதாகினர்

யாழ்ப்பாணம், செப். 22

நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 37 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

3 படகுகளில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மீனவர்களே இலங்கைக் கடற்படையால் இவ்வாறு கைது செய்யப்பட்டு, காங்கேசன்துறைக் கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் நாளையதினம் அவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம-100)

நடுக்கடலில் நேற்று சடலமொன்று மீட்பு!

# ஆழ்வார் தீர்த்தத்தில் காணாமற்போனவரா?

யாழ்ப்பாணம், செப். 22

வல்லிபுர ஆழ்வார் ஆலய சமுத்திர தீர்த்தத்தில் கடலில் காணாமற்போன ஆசிரியரான இளைஞனின் சடலம் நேற்று சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை வல்லிபுர ஆழ்வார் ஆலய சமுத்திர தீர்த்தம் இடம்பெற்றது. இதன்போது கடலில் நீராடிய அம்பன், குடத்தனையைச் சேர்ந்த கந்தசாமி வினோகரன் (வயது - 54) என்ற குடும்பத்தலைவர் நீரில் மூழ்கி உயிரிழந்திருந்தார். சாவகச்சேரி நுணாவிலைச் சேர்ந்தவரும், வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியருமான தயாசீலன் வைஷ்ணவன் (வயது - 28) என்பவர் காணாமற்போயிருந்தார்.

கடந்த மூன்று நாள்களாக அந்த ஆசிரியரைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், சடலம் மீட்கப்படவில்லை. நேற்றையதினம் கடற்றொழிலுக்காகச் சென்ற மீனவர்கள் ஆழ்கடல் பகுதியில் சடலமொன்று மிதப்பதைக் கண்டு அதனை மீட்டு கரைக்குக் கொண்டு வந்துள்ளனர். சடலத்தை பார்வையிட்ட பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா, விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார். மீட்கப்பட்ட சடலம் காணாமற்போன தயாசீலன் வைஷ்ணவனுடையதாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-100-26,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் உள்ள சேருவில, திருகோணமலை, மூதூர் ஆகிய தேர்தல் தொகுதிகளில் உள்ள 318 வாக்களிப்பு நிலையங்களில் மக்கள் நேற்று ஆர்வத்துடன் சென்று தமது வாக்குகளை செலுத்தினர். வயோதிபர்கள், நோயாளிகள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டோர் வாக்களிப்பில் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். (ச)



யாழ்.மாவிட்டபுரம் வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தமது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினார். (ச-20)



ஆதிவாசிகளின் தலைவர் உட்பட கிராம மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் வாக்குச்சாவடிகளுக்குச் சென்று தமது வாக்குகளை பதிவு செய்தனர். (ச)



ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கட்டப்பிராய் சனசமூக நிலைய மண்டபத்தில் நேற்று தனது வாக்கை பதிவு செய்தார். (ஒ-இ)



ஜனாதிபதித் தேர்தல் 2024 இல் கிளிநொச்சி மாவட்டத்தில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு.சந்திரகுமார் தனது வாக்கினை பதிவு செய்துள்ளார். (ச-214)



106 வயதான ஒருவர் திருகோணமலையில் நேற்று வாக்களித்தார். (ஒ-இ)

## வாக்குச்சீட்டை படமெடுத்தவர் காலியில் கைது

கொழும்பு, செப். 22

காலியில் வாக்களிப்பு நிலையத்தில் வாக்குச்சீட்டை புகைப்படம் எடுத்த ஓய்வுபெற்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை வாக்களிப்பு நிலையத்துக்கு வந்த அவர், தனது வாக்குச்சீட்டைப் பெற்றுக்கொண்டு வாக்களித்த பின்னர், அதனைப் புகைப்படம் எடுக்கும் போது பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ச)

## இரும்புப் படிக்கட்டுகளான வாக்களிப்பு நிலையத்தால் வாக்காளர்களுக்கு சிரமம்

கொழும்பு, செப். 22

நுவரெலியா மஸ்கலியா தேர்தல் தொகுதியிலுள்ள வாக்களிப்பு நிலையமொன்றில் வாக்காளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியதாக பதிவாகியுள்ளது.

தொழிற்சாலையின் மேற்பகுதியில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அத்துடன் இரும்பிலான படிக்கட்டுகள் அதில் அமைக்கப்பட்டுள்ளதால் வாக்காளர்கள் ஏறுவதற்கு மிகவும் சிரமப்பட்டனர். வயதான வாக்காளர்கள் சிலர் இந்தப் படிக்கட்டுகளில் ஏற முடியாமல் திரும்பிச் சென்றதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

மேலும் வாக்களிப்பு நிலையத்தின் உட்புறம் மிக குறுகியதாக இருந்ததால் தாம் பணிகளை மேற்கொள்ள சிரமங்களை எதிர் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



## தேர்தல் கடமையிலிருந்த பொலிஸ் அலுவலர் சாவு


கொழும்பு, செப். 22

பொலநறுவை, புலஸ்திபுர பிரதேசத்தில் வாக்கெடுப்பு நிலையத்தில் தேர்தல் கடமைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் திடீரென சுகவீனமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் என புலஸ்திபுர பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

எச்.எம். இரத்னபால என்ற பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் புலஸ்திபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச)



## வாக்குச்சாவடியில் அநாகரிகம்; ஒருவர் கைது

கொழும்பு, செப். 22


ஹோமாகம பிரதேசத்தில் உள்ள வாக்கெடுப்பு நிலையத்தில் மது போதையில் அநாகரீகமாக செயற்பட்ட நபரொருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக ஹோமாகம தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாக்கெடுப்பு நிலையத்துக்குள் மதுபோதையில் சென்ற நபரொருவர் தேர்தல் கடமைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு இடையூறு விளைவிப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமுகர்கள் வாக்களிப்பு





ரணில் விக்கிரமசிங்க

2024 ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க றோயல் கல்லூரியில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையத்தில் நேற்று தமது வாக்கைப் பதிவு செய்தார்.



சஜித் பிரேமதாஸ

2024 ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரான சஜித் பிரேமதாஸ மற்றும் அவரது பாரியார் திருமதி ஜலனி பிரேமதாஸ ஆகியோர் ராஜகிரிய கொடுவேகொட விவேகராம புராண விகாரை, சந்திரலோக தஹம் பாடசாலை கட்டடத்தில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையத்தில் வாக்களித்தனர்.



நாமல் ராஜபக்ச

ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச மனைவியுடன் வாக்கைப் பதிவு செய்தார்.



அநுரகுமார திஸாநாயக்க

தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க கொழும்பு 10 பஞ்சிகாவத்தை சாய் கோஜி சிறுவர் முன்பள்ளியில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையத்தில் வாக்களித்தார்.



அரியநேந்திரன்

ஜனாதிபதி வேட்பாளர் அரியநேந்திரன் தனது வாக்கினை நேற்றுக் காலை செலுத்தினார்.



ரவூப் ஹக்கீம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் நேற்று முற்பகல் கண்டி, ஹிந்தகொல்ல, சீவலீ மஹா வித்தியாலய, வாக்குச்சாவடியில் வாக்களித்தார்.



மஹிந்தானந்த அளுத்கமகே

கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான மஹிந்தானந்த அளுத்கமகே நாவலப்பிட்டி - குருந்துவத்த எம்.எஸ்.அளுத்கமகே தேசியப் பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையத்துக்கு சென்று வாக்கினை செலுத்தினார்.



தினேஷ் குணவர்த்தன


ஜனாதிபதித் தேர்தலுக்கான தனது வாக்கினை செலுத்தினார் பிரதமர் தினேஷ் குணவர்த்தன.



ஜீவன் தொண்டமான்

கொத்மலை வேவன்டன் தமிழ் வித்தியாலயத்தில், அமைச்சர் ஜீவன் தொண்டமான் தனது வாக்கினை பதிவுசெய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புலமைப்பரிசில் பரீட்சை மீண்டும் நடத்த ஆராய்வு

கொழும்பு, செப் 22

**இவ்வருடம் நடைபெற்ற 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் பரீட்சை வினாத்தாள் கசிந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்தால், பரீட்சையை மீண்டும் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.**

ஊடகங்களுக்கு நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக்குறிப்பிட்டுள்ளார். 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை கடந்த 15ஆம் திகதி நடைபெற்றது. வினாத்தாள் கசிந்துள்ளதாக தகவல் வெளியானதை அடுத்து பரீட்சைகள் திணைக்களம் விசாரணைகளை நடத்தியது. அந்த முதற்கட்ட விசாரணை அறிக்கையுடன் தற்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். அதன்படி, விசாரணை முடிவுகளின்படி செயற்படுமாறு ஜனாதிபதியும் அமைச்சரும் ஆலோசனை வழங்கினர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. மனவருத்தங்கள் நீங்கும். விற்பனையும் இலாபமும் கூடுதலாகக் கிடைக்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமை அவசியம். அலைச்சலும் சோர்வும் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல்நலனில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்களால் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பணியாளர்களால் பிரச்சினை ஏற்படக்கூடும்.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும்.சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாகும். பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும். குடும்பப் பொறுப்புகளின் காரணமாக அலைச்சலும் சோர்வும் ஏற்படும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் கிடைக்கக்கூடும். சர்ச்சைகளில் ஈடுபடவேண்டாம். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் வழக்கம்போல இருக்கும்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். இன்று குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். சிறு சங்கடம் ஏற்படும் என்றாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. பிள்ளைகளுக்காக செலவு செய்ய வேண்டிவரும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். புதிய முயற்சியைத் தொடங்க உகந்த நாள்.

**தனுசு:** நினைத்ததை நினைத்தபடி செய்து முடிப்பீர்கள். பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். கொடுத்த கடன் திரும்பக் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

**மகரம்:** கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். செலவு செய்ய நேரிடும். உணவு விடயத்தில் கவனம் தேவை. நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** மகிழ்ச்சி தரும் நாள். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முடிவு எடுப்பதில் பொறுமை அவசியம். ஆனால், விற்பனையும் இலாபமும் கூடுதலாக இருக்கும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சிகளுக்கு உகந்த நாள். திடீர்ச் செலவுகளும் ஏற்படக்கூடும்.

### கிழக்கு மாகாணத்தில்

## 1,124 பாடசாலைகளுக்கு சூரிய மின்சக்தி திட்டம்

கொழும்பு. செப். 22

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் முயற்சியால் முதற்கட்டமாக கிழக்கு மாகாணத்தில் உள்ள 348 பாடசாலைகளுக்கு சூரிய மின்சக்தித் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடந்த காலங்களில் கிழக்கு மாகாணத்தில் மின்சாரக் கட்டணம் செலுத்த இயலாத நிலையில் பல்வேறு பாடசாலைகள் முடங்கின. இந்த நிலையில் ஆளுநர், கிழக்கு மாகாணத்தில் உள்ள 1124 பாடசாலைகளில் சூரிய மின்சக்தி திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

அதன் முதற்கட்டமாக 342 பாடசாலைகளுக்கு ஆளுநரால் இந்தத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ச)




## தெஹிவளையில் துப்பாக்கிச்சூடு

### ஒருவர் காயம்

யாழ்ப்பாணம். செப். 22

தெஹிவளை, கடவத்தை வீதி பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். வீடொன்றுக்கு முன்னால் இருந்த நபர் ஒருவர் மீதே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இந்தச்சம்பவத்தில் காயமடைந்த 45 வயதுடையநபர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



## பாய்ந்தது 'பல்சர்' ஒருவர் படுகாயம்

மன்னார், செப். 22

மன்னார் பெரிய பாலத்தடியில் பல்சர் ரக மோட்டார் சைக்கிள் பாதையை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளின் சாரதி காயமடைந்த நிலையில் மன்னார் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஓ-213)

## பாகிஸ்தானுடனான உறவில் விரிசல்கள்

கொழும்பு. செப்.22

பாகிஸ்தானும் இலங்கையும் வர்த்தகத் துறையில் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டு கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்களுக்குப் பின்னரும் கூட இந்தப் பிணக்குகள் மற்றும் வர்த்தக மோதல்கள் தீர்க்கப்படாமல் உள்ளதாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, இலங்கைக்கான பாகிஸ்தானின் ஏற்றுமதிக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக பாகிஸ்தானிய சஞ்சிகை ஒன்று தெரிவித்துள்ளது. இலங்கை அதிகாரிகள் ஒத்துழைக்கவில்லை என்பதன் காரணமாகவே இந்த நிலை தொடர்வதாக, பாகிஸ்தானின் வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது. இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இந்த வர்த்தக ஒப்பந்தம், 2013ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# ஆட்சிமாற்றம் சுமுகமாகுமா?

ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைகள் உச்ச நிலையை அடைந்ததைத் தொடர்ந்து, தற்போது 'ஆட்சிமாற்றம் சுமுகமாக நடைபெறுமா?' என்பது தொடர்பான கேள்விகளே ஒவ்வொரு இலங்கையர்களின் மனங்களிலும் வலுவாக எழுந்துள்ளன.

நாட்டின் பல பகுதிகளிலும் நேற்று இரவு திடீரென இராணுவ வீதித்தடைகள் உருவாக்கப்பட்டுள்ளன. கேந்திர நிலையங்களில் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஜனாதிபதி ரணில் திட்டமிட்டுள்ளார் என்ற தகவல்களும் சமூக வலைத்தளங்களிலும் திணைக்கள மட்டங்களிலும் தீயாகப் பரவியிருந்தது. இந்தத் தகவல்களை 'அப்படி ஏதுமிருக்காது' என்ற ஒற்றை நிலைப்பாட்டில் இருந்து முற்றாக மறுதலித்துவிட முடியாது. ஏனெனில், பதவிவிலகும் நேரத்தில் நாடாளுமன்றத்தைக் கலைக்கக்கூடிய சிந்தனைப் போக்கு உள்ளவர்தான் ஜனாதிபதி ரணில்.

ஏற்கனவே உள்ளூராட்சித் தேர்தலை நடத்தாமல் பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ள ஜனாதிபதி ரணில், விடைபெறும் நேரத்தில் (?) நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டுச் செல்வதற்குச் சாத்தியங்கள் அதிகம். அவ்வாறு அவர் செயற்படும் பட்சத்தில் புதிதாகப் பதவியேற்கும் ஜனாதிபதியின் அதிகாரம் என்பது வெறும் 'முத்திரை' மட்டுமே. ஜனாதிபதியின் அதிகாரத்தைப் பயன்படுத்தக்கூடிய 'சீரான சட்டவாக்க', 'சட்ட நடைமுறை' வழிகள் இல்லாமல் போகும். காபந்து அரசாங்கம் என்னும் 'காற்பந்து' அரசாங்கத்தை அமைத்து அங்கும் இங்குமாக பந்தாடித் திரிவதற்கே புதிய ஜனாதிபதிக்கு நேரம் சரியாகி விடும். காலத்துக்குக்காலம் தேர்தல்களை நடத்துவதால் ஒருநாடு ஜனநாயக நாடு என்றாகி விடாது. மாறாக, மக்களின் கட்டளைக்கு மதிப்பளித்து ஆட்சிமாற்றமும் சுமூகமாகவும் இடம்பெறவேண்டும். அதுவே ஜனநாயகத்தின் மகிமை.

இலங்கையின் பொருளாதாரம் அதல பாதாளத்தில் வீழ்ந்திருந்து தற்போதுதான் நாடு மெல்லத் தலைதூக்கியிருக்கின்றது. இவ்வாறான தொரு நிலையில், ஆட்சி மாற்றத்தின் பின்னரான தளம்பல்கள் ' நிர்வாக முடக்கங்கள் நாட்டை படுபாதாளத்தில் தள்ளிவிடும். உலக வல்லரசான அமெரிக்காவில், தேர்தல் முடிவை ஏற்க மறுத்து ட்ரம்ப் மேற்கொண்ட குழப்பத்தால் அமெரிக்கப் பொருளாதாரமே ஆட்டம் கண்டது. அமெரிக்காவின் நிலையே அவ்வாறெனில், இலங்கை போன்ற நாடுகளில் அத்தகைய நிலை ஏற்பட்டால் கதி அதோகதிதான். எனவே இந்த இமாலய பிரச்சினை நிலையை உணர்ந்து, தானாக முன்வந்து புதிய அதிகாரப்பீடத்தை உரியவாறு அரியணையில் ஏற்றுவதுதான் அரசியல் முதிர்ச்சி. தன்னை ஆகச்சிறந்த அரசியல்வாதியாகவும் அரசியல் முதிர்ச்சியாளராகவும் காட்டிக்கொள்ளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சி மாற்றத்திலும் தன் தகுதியை நடத்தையை முதிர்ச்சியை வெளிப்படுத்த வேண்டும்.




# பொதுக்கடன் மறுசீரமைப்பு அடிப்படை உரிமை மீறல்!

## உயர்நீதிமன்றில் மனு

**கொழும்பு, செப்.22**

**பொதுக்கடன் மறுசீரமைப்பு தொடர்பான எந்தவொரு உடன்படிக்கையிலும் அதிகாரிகள் ஈடுபடுவதைத் தடுக்குமாறு கோரி, அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

மக்கள் போராட்டக் கூட்டணியின் தேசிய செயற்குழு உறுப்பினர் வசந்த முதலிகே நேற்றுமுன்தினம் உயர் நீதிமன்றத்தில் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார். சர்வதேச நாணயநிதியத்தின் தலையீட்டின் அடிப்படையில் அரசாங்கத்தால் முன்மொழியப்படும் பொருளாதார தீர்வுகள் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு ஒரு போதும் உறுதியான தீர்வுகள் அல்ல என மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். (ச)

## ஒருவருக்கு ஆகக்கூடியது 5 'சிம்கள்' வழங்க யோசனை

கொழும்பு, செப். 22

ஒரு தேசிய அடையாள அட்டை இலக்கத்தின் கீழ் அனைத்து தொலைபேசி நிறுவனங்களிடமிருந்தும் பெறக்கூடிய சிம்களின் அதிகபட்ச தொகையை 5 ஆக மட்டுப்படுத்துவதற்கான பரிந்துரை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நாட்டில் வேகமாகப் பரவிவரும் போதைப்பொருள் பாவனையை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கும் ஒழிப்பதற்கும் நடைமுறைப்படுத்த வேண்டிய வழிமுறைகள் குறித்து ஆராய்ந்து நாடாளுமன்றத்தில் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கான நாடாளுமன்ற விசேட குழுவின் அறிக்கையினால் இந்த பரிந்துரை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

## சி.ஐ.டி. பணிப்பாளர்களை கைதுசெய்ய தீர்மானமில்லை

கொழும்பு, செப். 22

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் விசாரணைகளுக்கு அமைவாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன மற்றும் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர ஆகியோரை கைது செய்வதற்கு எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார். (ஒ-இ)

## துண்டுப் பிரசுரங்களை தூக்கி வீசிய கட்சி

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்களிப்பு நடவடிக்கையில் வாக்காளர்கள் சுமுகமாக ஈடுபட்டனர். இந்த நிலையில் கட்சி ஒன்று தனது துண்டுப் பிரசுரங்களை முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேச வீதியில் தூக்கி வீசியது குறித்த கட்சியின் தேர்தல் பரப்புரைத் துண்டு பிரசுரங்களை பொலிஸார் பொறுக்கி அப்புறப்படுத்தியுள்ளார்கள். (ஒ-25, 19)

## அத்தியாவசிய சேவைகள் வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, செப்.22

பல சேவைகளை அத்தியாவசிய சேவையாக்கி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் செயலாளர் ஈ.எம். எஸ்.பி. ஏகநாயக்க நேற்றுமுன்தினம் இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார். அதன்படி, மின்சார வழங்கல் தொடர்பான சகல சேவைகளும், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் எரிபொருள் விநியோகம் சேவைகள் என்பன அத்தியாவசிய சேவைகளாக மாற்றப்பட்டுள்ளன. (ச)

## நாளை

23.09.2024

திங்கட்கிழமை - புரட்டாதி - 07

சுபநேரம் : 12.02- 01.32

ராகுகாலம் : 07.32 - 09.02

## நாளொரு நல்வார்த்தை

**நீங்கள் செய்யும் தர்மம் ஒரு போதும் உங்கள் செல்வத்தை குறைக்காது.**

- நபிகள் நாயகம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா அண்ணாநகர் பரமேஸ்வர வித்தியாலயத்தில் அமைந்துள்ள வாக்குச்சாவடியில் வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் கு.திலீபன் வாக்களித்தார். (ஒ-110)



மன்னார் தாராபுரம் வாக்களிப்பு நிலையத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் நேற்று மு.ப. 11 மணியளவில் வாக்களித்தார். (ஒ-56)



அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதய வித்தியாலயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தனது வாக்கை நேற்றுப் பதிவு செய்தார். (ஒ-27)





கண்டியிலும் மக்கள் ஆர்வத்துடன் வரிசைகளில் நின்று வாக்களிப்பு (ச)

## தீக்கிரையான அம்மன் கோவில்!

மட்டக்களப்பு, செப்.22

மட்டக்களப்பு கல்லடி பேச்சி அம்மன் கோவிலில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 10 மணிக்கு முழுவதுமாக தீப்பற்றி எரிந்துள்ளது. தீவிபத்துக்கான காரணம் இதுவரை அறியப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (ஒ-25-100)

## வெற்றிபெறுவார் ரணில்!

### மஸ்தான் ஆரூடம்!

வவுனியா, செப்.22

முதல்சுற்றிலேயே ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெறுவார் என இராஜாங்க அமைச்சர் காதர்மஸ்தான் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலத்தில் அமைக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்தில் நேற்று சனிக்கிழமை தனது வாக்கினை முதலாவது நபராக பதிவுசெய்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் முதல்சுற்றிலேயே அதிகளவான வாக்குகளை பெற்று வெற்றிபெறுவார். அதன் மூலம் நாடும், மக்களும் வளம்பெறும் விதத்தில் அவரது ஆட்சிமுறை அமையும்.

நாட்டுமக்கள் மாத்திரம் அல்லாமல் வன்னியின் மூன்று மாவட்ட மக்களும் அதிகூடிய வாக்குகளை அவருக்கு வழங்குவார்கள் என்பதில் மாற்றுக்கருத்துகள் இல்லை என்றார். (ஒ-45-110)



மலையகத்தில் கொட்டும் மழையிலும் மக்கள் வாக்குச் சாவடிகளுக்குச் சென்று தமது வாக்குகளை பதிவு செய்தனர். (ச)



## நிறுவுநர்தின நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 22

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் நிறுவுநர்தின நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ஒ-25, 66)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், செப். 22

யாழ்ப்பாணம் அராலி கிழக்கு மெஞ்ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்தின் இறுதி நாள் உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. காலை 8 மணிக்கு 108 சங்கு வைத்து சங்காபிஷேகம் நடைபெறும்.

தொடர்ந்து, நண்பகல் 12. மணிக்கு எம்பெருமானின் புகழ் கூறும் புதிய பாடல் வெளியீடும், கலைஞர்கள் கௌரவிப்பும் நடைபெறவுள்ளதாக ஆலய தர்மகர்த்தா ஐயாத்துரை கண்ணா தெரிவித்துள்ளார். (ச)

## நவாலிப் படுகொலைகள் நூல் வெளியீடு!

யாழ்ப்பாணம், செப்.22

வல்வை ந.அனந்தராஜின் 'துயரம் தோய்ந்த நவாலிப் படுகொலைகள்' நூல் வெளியீட்டு விழா ஊடகவியலாளர் தம்பையா தயாபரன் தலைமையில் லண்டன் குறைடன் பகுதியின் கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் தம்பையா தயாபரன் தலைமையுரையையும், ஆசிரியர் கந்தையா பாலகிருஸ்ணன் அறிமுக உரையையும், திருமகாலிங்கம் சுதாகரன் வெளியீட்டு உரையையும், அருட்தந்தை ஜெபநேசன், சிவசிறிராம் வாகீசக்குருக்கள், அரசியல் இராணுவ ஆய்வாளர் கலாநிதி பிரபாகரன், மருத்துவக் கலாநிதி திருமதி இந்துமதி ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். நிகழ்வில் தமிழ்த்தேசிய ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். (ஒ-45-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் அவரது பாரியார் திருமதி யசோதை சரவணபவன் இருவரும், நாவலர் கலாசார மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடியில் நேற்றுக்காலை வாக்களித்தனர். (ஒ-20)





## வவுனியா மாவட்டத்தில் சிறப்பான வாக்குப்பதிவு

வவுனியா, செப். 22

வவுனியா மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குப்பதிவு காலையிலிருந்தே சிறப்பாக இடம்பெற்றுள்ளது. மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்துள்ளனர்.

வடக்கின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் வவுனியா மாவட்டத்திலேயே அதிகளவான மக்கள் காலையில் வாக்களித்திருந்தனர். (ஒ-110,18)



## கிளிநொச்சி மாவட்டத்தில் அமைதியான வாக்களிப்பு


கிளிநொச்சி, செப். 22

ஜனாதிபதித் தேர்தலில் கிளிநொச்சி மாவட்ட மக்கள் நேற்று அமைதியான முறையில் வாக்களித்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தனது வாக்கை வட்டக்கச்சி மாயனூர் வித்தியாலயத்தில் பதிவு செய்திருந்தார். (ஒ-113)

## வாக்களிப்பைப் பார்வையிட்ட ஐரோப்பிய கண்காணிப்பாளர்கள்

மன்னார், செப். 22

மன்னாரில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பை ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்பாளர்கள் நேரில் சென்று பார்வையிட்டனர். (ஒ-56)



## வட்டுக்கோட்டையில் அமைதியான வாக்களிப்பு

யாழ்ப்பாணம், செப். 22

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைதியாக நேற்று ஆரம்பமாகி இடம்பெற்றது.

வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியில், வள்ளியம்மை வித்தியாசாலை, முருகமூர்த்தி வித்தியாசாலை, அராலி சரஸ்வதி கல்லூரி மற்றும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையங்களில் மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர். (ஒ-27)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லெபனானில் அடுத்தடுத்து பயங்கரம்

# 'டிவைஸ் வெடிப்புத் தாக்குதல்'

# 32 பேர் சாவு; 3,000 பேர் காயம்





**பெய்ரூட், செப்.22**

**லெபனானில் பேஜர்கள் வெடிப்பு நடந்த அடுத்த நாளே நிகழ்ந்த 'வாக்கி டோக்கிகள்' வெடிப்புகளில் 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும், 450க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர், என்று அந்நாட்டு சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.**

ஹிஸ்புல்லா ஆயுதக் குழுவால் பயன்படுத்தப்பட்ட வாக்கி-டோக்கிகள் தலைநகர் பெய்ரூட்டின் தெற்கு புறநகர்ப் பகுதிகள், பெக்கா பள்ளத்தாக்கு, தெற்கு லெபனான் போன்ற ஹிஸ்புல்லாவின் கோட்டைகளாகக் கருதப்படும் பகுதிகளில் வெடித்துள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமையன்று ஹிஸ்புல்லா உறுப்பினர்களின் பேஜர்கள் வெடித்து 12 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் சிலரின் இறுதிச் சடங்குகளிலும் சில வாக்கி டோக்கி வெடிப்புகள் நிகழ்ந்துள்ளன.

இந்தச் சதிச் செயலில் இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட்டின் சதி இருப்பதாக ஹிஸ்புல்லா அமைப்பு குற்றஞ்சாட்டியது. எனினும் இஸ்ரேல் இது குறித்து மௌனம் காத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஹிஸ்புல்லா அமைப்பின் உறுப்பினர்களுக்கு புதிதாக 5 ஆயிரம் பேஜர்கள் கொள்முதல் செய்யப்பட்டு உள்ளது. இதில் சிறிய அளவிலான வெடிமருந்துகள் புகுத்தி வைக்கப்பட்டுள்ளன. பேஜரில் உட்பகுதியில் 3 கிராம் வெடிமருந்து வைக்கப்பட்டு இருந்துள்ளது. தொழில்நுட்பங்கள் கொண்டும் அதனைக் கண்டறிய முடியாத வகையில் அது வடிவமைக்கப்பட்டு இருந்துள்ளது என்றும் தெரியவந்துள்ளது.

அதேவேளை இஸ்ரேல் நீண்ட காலமாக ஹிஸ்புல்லாவை அதன் எல்லைகளில் மிகப்பெரிய அச்சுறுத்தலாகக் கருதுகிறது. அது வளர்ந்து பயங்கர ஆயுதக் குழுவாக உருவாகி வருவது இஸ்ரேலுக்கு கவலையளிப்பதுடன் இஸ்ரேல் தனக்கு மிகப்பெரிய பாதுகாப்பு அச்சுறுத்தலாக ஹிஸ்புல்லா அமைப்பை கருதுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# இந்தியாவில் பெருகும் பணக்காரர்கள்

யாழ்ப்பாணம், செப்.22

இந்தியாவில் வெளியாகியுள்ள புதிய அறிக்கையின்படி, கடந்த 5 ஆண்டுகளில், ஒரு ஆண்டுக்கு 10 கோடி ரூபாவுக்கும் அதிகமாக சம்பாதிக்கும் இந்தியர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் அதிக அளவில் வருமானம் ஈட்டுபவர்களின் எண்ணிக்கை 63 சதவீதம் அதிகரித்துள்ளது.

இந்த தகவல், இந்தியாவின் பொருளாதாரம் முன்னோக்கி செல்வதை சுட்டிக்காட்டுகிறது. அதேவேளை, ஒரு ஆண்டுக்கு 50 இலட்சம் ரூபாவுக்கும் மேல் வருமானம் ஈட்டுபவர்களின் எண்ணிக்கை 25 சதவீதம் அதிகரித்து, கிட்டத்தட்ட 10 இலட்சம் பேரை எட்டியுள்ளதாக சுட்டிக் காட்டப்படுகிறது. (ச)



## விண்வெளியில் பிறந்தநாள் கொண்டாடிய சுனிதா வில்லியம்ஸ்

வொஷிங்டன், செப். 22

சர்வதேச விண்வெளி மையத்தில் சிக்கியுள்ள சுனிதா வில்லியம்ஸ், நேற்றுமுன்தினம் தனது பிறந்தநாளை விண்வெளியில் கொண்டாடியுள்ளார்.

கடந்த ஜூன் மாதம் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் என நாஸாவின் இரண்டு விண்வெளி வீரர்கள் போயிங் நிறுவனத்தின் ஸ்டார்லைனர் விண்கலனில் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் இருந்து சர்வதேச விண்வெளி மையத்துக்குச் சென்றனர். சுமார் ஒரு வார காலம் அவர்களது பயணம் திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும் சுமார் நூறு நாள்களை கடந்தும் பூமி திரும்பாமல் அவர்கள் அங்கேயே உள்ளனர்.

அவர்கள் பயணித்த ஸ்டார்லைனர் விண்கலனில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதமே அவர்கள் இருவரும் பூமிக்குத் திரும்புவார்கள் என நாஸா தெரிவித்துள்ளது. (ச)

## புதிய குருதி வகை பிரிட்டன் கண்டுபிடிப்பு

கொழும்பு, செப்.22

பிரித்தானிய விஞ்ஞானிகள் 50 ஆண்டுகள் நீடித்த ஆராய்ச்சியின் விளைவாக புதிய இரத்த வகையை கண்டுபிடித்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

பிரித்தானிய ஆராய்ச்சியாளர்கள் புதிய 'MAL' என்ற ரத்த வகையைக் கண்டுபிடித்துள்ளனர்.

இது ஏற்கனவே உள்ள 4 பிரதான ரத்த வகைகளான ஏ, பி, ஏபி, ஓ ஆகியவற்றுக்கு மேலாக வரும் ஒரு புதிய வகையாகக் கருதப்படுகிறது.

இந்த புதிய ரத்த வகையை அடையாளம் காண, ஆய்வுக் குழு 5000 பேரின் ரத்தத்தை ஆராய்ந்தது. 'MAL' ரத்த வகை, மனித உடலின் இயல்புகளை மேலும் புரிந்து கொள்ள உதவுவதாக தெரிவிக்கப்படுகிறது. (ச)



## உலகின் வயதான பூனை உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப்.22

உலகின் மிக வயதான பூனை உயிரிழந்துள்ளது. இங்கிலாந்தைச் சேர்ந்த ரோஸி என்ற பூனையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குறித்த பூனையானது, இந்த ஆண்டு ஜூன் மாதம் 1 ஆம் திகதி தனது 33 ஆவது பிறந்தநாளை கொண்டாடியுள்ளது. 1991ஆம் ஆண்டில் பிறந்த ரோஸி வயது மூப்பு காரணமாக இங்கிலாந்தில் உள்ள நார்விச் நகரில் உள்ள அவரது உரிமையாளரின் வீட்டில் உயிரிழந்துள்ளது. 33 ஆண்டுகள் வாழ்ந்த அந்த பூனையின் வாழ்நாளை மனித வாழ்நாளோடு ஒப்பிட்டால் இது 152 ஆண்டுகள் ஆகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## ட்ரம்ப் தகவல்கள் 'ஹக்'

வொஷிங்டன், செப். 22

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட்ட்ரம்பின் தகவல்களை ஹக்செய்த ஈரான் அதனை ஜோ பைடனின் பிரச்சார குழுவிற்கு அனுப்பியது என எவ்பிஐ தெரிவித்துள்ளது.

ஈரானின் இந்த நடவடிக்கைக்கு பைடனின் பிரசார குழுவில் உள்ளவர்கள் பதிலளித்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ் நகரில் தையல் வகுப்புக்கள்**

மகளிருக்கான சாறி பிளவுஸ், ஷல்வார், சட்டைகள், Lehenga skirt & blouse தைக்கும் பயிற்சிகள் ஆரம்பமாகின்றன.

தொடர்புகளுக்கு:
077 711 0383, 074 217 0383 (whatsapp)

**வாடகைக்கு**

யாழ் நகருக்கண்மையில் Beauty Parlour நடாத்த தளபாடங்களுடனும் Cakes, Icing ஓடர்கள் செய்ய உபகரணங்களுடனும் இடம் வழங்கப்படும்.

மகளிருக்கு மட்டும்

தொடர்பு: 074 217 0383

**அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபம் முகூர்த்த நாட்களுக்கான பதிவுகள்**

அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபத்தில் (ASR WEDDING HALL) உங்கள் பிள்ளைகளின் திருமணம், பூப்புனித நீராட்டு விழாக்கள், கிறிஸ்தவ பதிவுத் திருமணங்கள், முஸ்லிம் நிக்ஹா (திருமணம்), பிறந்த நாள் கொண்டாட்டம் செய்ய விரும்புவோர்கள்

பதிவுகளை மேற்கொள்ள நாடவேண்டிய மண்டபம்.

**அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபம்**

**இல. 542, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**

தொலைபேசி எண்: 021 222 1355, 021 222 1356


# மரண அறிவித்தல்

பிறப்பு
10 . 08 . 1936



இறப்பு
21 . 09 . 2024

## திருமதி மாணிக்கம் சண்முகம்

(இளைப்பாறிய ஆசிரியர்- இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்)

யாழ்ப்பாணம் இளவாலையைப் பிறப்பிடமாகவும் வவுனியா காத்தார் சின்னக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் சண்முகம் அவர்கள் நேற்று (21.09.2024) சனிக்கிழமை இறைவனின் திருவடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - நாகமுத்து தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற வீரகத்தி - பொன்னம்பலம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வீரகத்தி சண்முகம் அவர்களின் அன்பு மனைவியும், நந்தினி (நோர்வே), முரளிதரன் (பிரான்ஸ்), அரவிந்தன் (நிர்வாக உத்தியோகத்தர், மாவட்ட செயலகம், வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நேசராசா (நோர்வே), சுமதி, நிரஞ்சனா தேவி (விரிவுரையாளர்,- தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், அருண் பிரசாத், நர்த்தகி, மதுஷாணி, மதுஷன், மாணிக்ஷன், அபிஷேக், வர்ஷாயினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.09.2024) திங்கட்கிழமை மதியம் 12.00 மணியளவில் காத்தார் சின்னக்குளம் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூந்தோட்டம் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்பு:
077 6052 622

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
13 . 02 . 1951



மறைவு
18 . 09 . 2024

## வேலுப்பிள்ளை தவராஜா

கரம்பொன் மேற்கைப் பிறப்பிடமாகவும், கனடா ரொரண்டோவை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தவராஜா கடந்த (18.09.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சவுந்தரம் (நெடுந்தீவு மேற்கு) தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - மகேஸ்வரி (சீனியர் லேன்) தம்பதியரின் மருமகனும், மனோரஞ்சினி (கனடா) அவர்களின் அன்புக் கணவரும், தவராணி, தவசீலன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், இலட்சுமணன், நகுலாநந்தரூபி, தெய்வேந்திரன், லோகேந்திரன், மகாலட்சுமி, மனோராஜினி, காலஞ்சென்ற ரவீந்திரன், மற்றும் மனோபத்மினி, சற்குணேஸ்வரி, காலஞ்சென்ற பற்குணராஜா மற்றும், ஆனந்தராஜா ஆகியோரின் மைத்துனரும், தபோதன், மிதுஷிகா, சஜீவரன், யலக்ஷி, பவனுஜா, மிதுலா, ஓவியா, இலக்கியா, தர்மிகா, சயந்தி, உபேந்திரா, சுபேந்திரா, பாரதி, கஸ்தூரி ஆகியோரின் பாசமிகு மாமாவும், நிவேதிகா, மாலிகா ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.09.2024) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
குடும்பத்தினர்.

சகோதரி - 077 525 9567
சகோதரன் - 074 035 3529

(CS/56276) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
21 . 05 . 1943



மறைவு
16 . 09 . 2024

## பெஞ்சமின் ஜெபரத்தினம் நவரட்ணம்

(Electrical Contracter)

ஹற்றனைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பெஞ்சமின் ஜெபரத்தினம் நவரட்ணம் அவர்கள் கடந்த (16.09.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான எட்வின் நவரட்ணம் - அன்னலக்சுமி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், நிலான், நிலானி, சுஜந்தன், சுகந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுமதி, குமரேசன், கிருசாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான விஜயரட்ணம் நவரட்ணம், யோகரட்ணம் நவரட்ணம், பிராங் நவரட்ணம் மற்றும் ஜோய் அரியதேவா, தர்மரட்ணம் நவரட்ணம், இமானுவல் நவரட்ணம் (கிருபா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நிருத்தி, பிரனீஸ், டிபேஸ், மாதுஸ், திவானி, கேதார் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது மட்டுவில் தெற்கில் உள்ள 'நிலாமனை' இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நலன் விரும்பிகள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

391 A, மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி,
077 286 8636


தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைனின் அணுவுலைகளை தாக்குவதற்கு ரஷ்யா திட்டம்!

கீவ், செப். 22

உக்ரைனின் அணுவுலைகள் மீது தாக்குதல் நடத்துவதற்கு ரஷ்யா திட்டமிட்டுள்ளது என்றும், குளிர்காலத்துக்கு முன்னர் இந்தத் தாக்குதல் நடத்தப்படலாம் என்றும் உக்ரைன் வெளிவிவகாரத்துறை தெரிவித்துள்ளது.



நீண்டதூரம் சென்று தாக்கக்கூடிய ஏவுகணைகளை உக்ரைனுக்கு வழங்கவேண்டும் என்று கனடா தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது. அதேநேரம் அமெரிக்கா, நேட்டோ கூட்டணி நாடுகளும் இது தொடர்பான பரிசீலனைகளை முன்னெடுத்துள்ளன. இந்த நிலையிலேயே, இவ்வாறு நீண்டதூர ஏவுகணைகள் உக்ரைனுக்கு வழங்கப்படும் பட்சத்தில், அதற்குப் பதிலடியாக உக்ரைனின் அணுவுலைகள் மீது தனது அதி அபாயகரமான ஏவுகணைகளால் தாக்குதல் நடத்த ரஷ்யா திட்டமிட்டுள்ளதாக உக்ரைனின் வெளிவிவகார அமைச்சர் சிபிஹா குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தப் போரின்போது அணுவுலைகள் தாக்கப்படக்கூடாது என்று அணுக்கதிர் தடுப்புப் பணியகமும், ஐக்கிய நாடுகள் சபையும் தொடர்ச்சியாக வலியுறுத்திவரும் நிலையில், உக்ரைனின் அணுவாலைகளுக்கு அருகே நிரந்தரமான வான் தடுப்புச் சாதனங்களைப் பொருத்த அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் முன்வர வேண்டும் என்றும் சிபிஹா அழைப்பு விடுத்துள்ளார்.

நீண்டதூரம் சென்று தாக்கக்கூடிய ஏவுகணைகளை உக்ரைனுக்கு வழங்கும் பட்சத்தில், பெலாரஸில் அணுவாயுதங்களை நிறுத்துவோம் என்றும் ரஷ்யா எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## நல்லூரில் இன்று குருதிக்கொடை

யாழ்ப்பாணம், செப். 22

தியாகதீபம் திலீபனின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல் நாளை முன்னிட்டு தியாகதீபம் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் மாபெரும் குருதிக்கொடை முகாம் நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியடியில் இன்று காலை 9 மணிமுதல் 12 மணிவரை இடம்பெறவுள்ளது. (ம-66)


## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக்கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.
198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)
077 138 7596, 071 999 9306
(CS/56272) J-1

## விசா ஆலோசனை சேவை

UK விசிட் 3 வாரங்களில் UK Work பெமிட் 6 வாரங்களில் UK Student நவம்பர் இரண்டாவது வாரம் பயணமாகலாம். IELTS இன்றி பயணமாகலாம்.
ஏனைய சகல வகையான விசா விடயங்களுக்கும் எம்மை தொடர்பு கொள்ளவும்.
கதிரேசு வீதி, வவுனியா. திருநெல்வேலி, யாழ்ப்பாணம். வெள்ளவத்தை, கொழும்பு.
தொடர்பு: 077 604 0373

Government TVEC Approved
தாதியர் பயிற்சிப்பாடசாலை
FLORENCE NIGHHTINGAL
## தாதியர் பயிற்சிநெறி - 2024
நுழைவுத் தகைமை
- க.பொ.த.சாதாரண தரம் குறைந்தது 5 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் & A/L
- விண்ணப்பதாரி 16 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல்
- பயிற்சிக்கால எல்லை 1 வருடம் (பகுதி நேரம்)
- பயிற்சி முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்
- தனியார் வைத்தியசாலையில் நிரந்தர வேலைவாய்ப்புக்கள்
- மற்றும் இலகுவான வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்

கற்கை நிலையங்கள்
மருதனார்மடம் நெல்லியடி சாவகச்சேரி
விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கங்கள்
VIBER 077 718 6438 WHATSAPP 077 482 4473 T.P.NO 077 718 6438
நிர்வாகம்
புளோரன்ஸ் நைற்றிங்கேல் தாதியர் பயிற்சிப் பாடசாலை. (1052)

## தவறவிடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் நாவலர் வீதியடியில் 195402310105 இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை, ஜேர்மன் நாடு விசாகாட் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் உட்பட கைப்பை தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்ளவும்.
077 486 4062

ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்
இந்தியாவில் ஆன்மீகத்துறையில் 10 வருடங்களாக புகழ்பெற்ற
## அம்மன் அருள் வாக்கு
தினமும் காலை : 9.00 - 12.00 மணிவரை
மாலை : 3.00 - 05.00 மணிவரை
- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?
- கால் வீக்கம், நாட்பட்ட ஆறாத புண்.

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
திருமதி வே. மோகனதாஸ்
இல.77, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
வெளிநாட்டவர்களும் அருள்வாக்கு பெற தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 071 241 1234, 021 221 1239
(CS/56274 B) J-1

## விற்பனைக்கு

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக மூன்று கடைகளும், யாழ் ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக மூன்று கடைகளும், யாழ் K.K.S வீதியில் ஜெகன் களஞ்சியத்திற்கு அருகில் 6 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு:
077 723 2535

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள ஆர்விஜி பீடி கம்பனிக்கு வேலையாட்கள் தேவை.
இரவு நேர காவலாளி (21 - 35 வயதிற்குட்பட்ட ஆண்கள்)
தகைமைகள் : முன்பு வேலை செய்த அனுபவம் மற்றும் வேலை செய்த இடத்தின் சான்றுப்பத்திரம்.
ஆர்.வி.ஜி பீடிகளை எமது ஸ்தாபனத்தில் நேரடியாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.
கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் வரவும்.
ஆர்.வி.ஜி பீடி கம்பனி
இல.58, குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021 222 4766, 021 222 6806

## காணவில்லை

கறுப்பு Labrador இன ஆண் நாயினை மானிப்பாய் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமையில் (13.09.2024) இருந்து காணவில்லை.
தகவல் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
ஜெகதீசன்: 077 4510 000
மானிப்பாய்

அக்குரேட் மருத்துவ ஆய்வுக்கூடம் நடத்தும்
## Dip.in Medical Laboratory Technology
- தகைமை G.C.E O/L
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்பு, மேற்படிப்பு என்பவற்றிற்கான திறவுகோல்.
- 25 வருட அனுபவம் வாய்ந்த அரச ஊழியரினால் பயிற்சி வழங்கப்படும்.
- செயன் முறைப் பயிற்சிகள் 100% கற்றுத்தரப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி : 20.10.2024
Accurate Medical Laboratory Service
77, Kandy Road, Jaffna
021 222 1239, 071 241 1234
(CS/56274) J-1

## உடனடி வேலைவாய்ப்பு

பிரபல்யமான கம்பனிக்கு நாடு முழுவதும் முகாமையாளர்கள், பணியாளர்கள் தேவை. காப்புறுதி துறையிலுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு: 076 112 4145

## The Royal College of Jaffna

தனியார் கல்வி நிறுவனம்-சங்கானை
தனியாகவோ சிறு குழுக்களாகவோ ஆங்கிலத்தில் விரைவாகக் கதைக்கப்பயில By ந.விக்னேஸ்வரன் ஆச்சார்யார். குபேரன் கட்டட மாடி, சங்கானை ரவுண், பிராண்பற்று வீதி, சங்கானை.
தொடர்பு: 077 675 1649

## வீடு விற்பனைக்கு

கொழும்பு-13, கொச்சிக்கடை தோட்டத்தில் 2 அறைகள், கிச்சன், பாத்ரூம், தனிவழி, மின்சாரம், தண்ணீர் வசதிகளுடன் டைல் பதிக்கப்பட்ட 600 SQFT வீடு 2ஆம் மாடியில் குறைவான விலையில் விற்பனைக்கு உண்டு.
Contact No:071 6050 074

## வீடுகள் வாடகைக்கு

யாழ் நகரை அண்டிய பகுதிகளில் சிறிய வீடுகள் வாடகைக்கு உண்டு. அத்தோடு படிக்கும் மாணவர்களுக்கான அறைகளும் எம்மிடம் உண்டு.
தொடர்பு: 077 345 0039
077 348 0039

## டொச் வகுப்புகள்

German, Swiss செல்வோருக்கு Deutsch A-1 பரீட்சைக்கான வகுப்புகள் யாழ் நகரில் ஆரம்பமாகின்றன.
076 062 0446

## நல்லூர் கந்தன் திருமண சேவை

எம்மிடம் சகல மணமக்கள் ஜாதகங்களும் போதிய அளவு கைவசம் உண்டு. நீங்கள் விரும்பியவாறு விரைவாக ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்பு: வி.ஜெயந்தி
T.P: 077 973 3183


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐஸ்லாந்துக்குள் ஊடுருவிய பனிக்கரடி சுட்டுக் கொலை!



ஐஸ்லாந்தில் எட்டு ஆண்டுகளுக்கு பின்னர் பனிக்கரடியொன்று தென்பட்டதாகவும் அதுசுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பனிக்கரடியால் உள்ளூர் மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்ற அச்சம் காரணமாகவே அதைச் சுட்டுக் கொன்றுள்ளதாக பொலிஸார் விளக்கம் அளித்துள்ளனர்.

பனிக்கரடிகள் ஐஸ்லாந்தை பூர்வீகமாக கொண்டவை அல்ல. ஆர்டிக் பனிப் பிரதேசத்தில் தான் அதிகளாவிலான பனிக்கரடிகள் வாழ்கின்றன. கிரீன்லாந்திலி ருந்து உருகும் பனிக்கட்டிகள் வழியே பனிக்கரடிகள் ஐஸ்லாந்திற்கு வருகின்றன. அவ்வாறாக வந்த பனிக்கரடியொன்றே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடைசியாக 2016ஆம் ஆண்டுதான் ஐஸ்லாந்தில் பனிக்கரடி இறுதியாக அவதானிக்கப்பட்டிருந்தது. 9ஆம் நூற்றாண்டில் இருந்து இப்போது வரை ஐஸ்லாந்தில் 600 பனிக்கரடிகள் அவதானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# தியாகதீபம் ஞாபகார்த்த சித்திரப் போட்டி இன்று!

தியாகதீபம் திலீபனின் 37ஆவது ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு மாணவர்களுக்கான தியாகதீபம் திலீபன் ஞாபகார்த்த சித்திரப் போட்டி நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் நினைவுத் தூபியடியில் இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.

தரம் 1 முதல் 5 வரையான மாணவர்களுக்கு வர்ணம் தீட்டுதல் போட்டியும், தரம் 5 முதல் 12 வரையான மாணவர்களுக்குச் சுவரொட்டிப் போட்டியும் இடம்பெறவுள்ளன. போட்டியில் வெற்றியீட்டுபவர்களுக்குப் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஓ,25,66)


## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 12 . 1983



மறைவு 21 . 09 . 2024

### நந்தகுமார் செந்தூரன்

தனங்கிளப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நந்தகுமார் செந்தூரன் நேற்று (21.09.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் நந்தகுமார்-ஜெயமலர் தம்பதியரின் அன்பு மகனும் தணிகைக் குமரன் - கமலாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும் சுதர்சனாவின் அன்புக் கணவரும் துஷாரா, பிரணாத் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தனுஷா, பிரணவரூபன், ஆரூரன், ஆகியோரின் அன்புச் சகோதரனும் உதயானந், ஜினோஷா, ஜினோதா, வதனி, கென்சிகா, யனுஷா ஆகியோரின் மைத்துனரும் மதுஷ்னிகாவின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2024) முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முள்ளிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

தனக்கிளப்பு,
சாவகச்சேரி.

தம்பி : 077 582 3661
மைத்துனர் : 077 920 8558

(CR 43268) V-1



## மரண அறிவித்தல்



### வைத்திலிங்கம் நடராஜா

(ஓய்வுபெற்ற மூத்த அரச கணக்காளர்)

யாழ். அனலைதீவைப் பிறப்பிடமாகவும், வண்ணார் பண்ணையை வதிவிடமாகவும் கொண்டிருந்த வைத்திலிங்கம் நடராஜா அவர்கள் நேற்று (21.09.2024) சனிக்கிழமை காலை அவரது இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராஜ துரை-நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், அமரர் வசந்தகோகிலா (லீலா)வின் அன்புக் கணவரும், இளங்கோ (பிரான்ஸ்), மணிவண்ணன் (பிரித்தானியா), தமயந்தி (கனடா), ஜானகி (பிரித்தானியா), வாசுகி (பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ருனித்தா, விஜிதா, சிங்காரவேலன், பஞ்சகுமார், இராகுலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சோதியா, பாநிலா, இளமாறன் (செல்வன்) - ஆதிகேசவன், குந்தவை - நிதுஷா, சௌமிகா - நிருத்திகா, பிரணவக்குமரன்-சாரண்யா, சத்தியன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ் சென்ற அன்னலட்சுமி, இராதபுஷ்பம், விஜயலட்சுமி, காலஞ் சென்ற புஷ்பராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: பிள்ளைகள்
கணேசு செல்வகுமார் (பெறாமகன்) - இந்திராணி

தொடர்புகளுக்கு: 00 94 21 222 5635
00 94 76 994 5829

(CS 1128) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தபால்...**

9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் நேற்று நடைபெற்று முடிந்ததையடுத்து, நேற்று மாலை முதல் வாக்கெண்ணும் பணிகள் ஆரம்பித்தன. முதலாவதாக தபால்மூல வாக்குகளே வெளியிடப்பட்டுக் கொண்டிருந்த நிலையில், அதிகாலை 3 மணிவரை வெளியான முடிவுகளின் அடிப்படையில் அநுரகுமார திஸாநாயக்க முன்னிலை பெற்றிருந்தார்.

அறிவிக்கப்பட்ட வாக்குகளில் 58 வீதமான வாக்குகளை அநுரகுமார திஸாநாயக்க பெற்றிருந்தார். 19 வீதமான வாக்குகளுடன் இரண்டாம் இடத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெற்றிருந்தார். 18 வீதமான வாக்குகளுடன் மூன்றாம் இடத்தை சஜித் பிரேமதாஸ பெற்றிருந்தார்.

எனினும் தொகுதி ரீதியான பிரதான வாக்குகளின் முடிவுகள் எவையும் இன்று அதிகாலை வரையில் அறிவிக்கப்படவில்லை. அந்த வாக்குகளின் அடிப்படையில் தேர்தல் முடிவுகளில் மாற்றங்கள் ஏற்படும் சாத்தியங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆயினும் தபால் மூல வாக்குகள் மக்கள் மனதை பிரதிபலிப்பதாகவும், பிரதான வாக்குகளிலும் அநுரவே முன்னிலை பெற்று புதிய ஜனாதிபதியாக இன்று மாலை பதவியேற்பார் என தேசிய மக்கள்சக்தி வட்டாரங்கள் இன்று அதிகாலையில் 'உதயனுக்குத்' தெரிவித்தன. (அ,ம26)

**யாழ்ப்பாணத்தில்...**

யாழ். மாவட்டத்தில் இம்முறை ஐந்து இலட்சத்து 93 ஆயிரத்து 187 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். 511 வாக்களிப்பு நிலையங்களில் நேற்றுக் காலை 7 மணிக்கு ஆரம்பமாகிய வாக்களிப்பு மாலை 4 மணி வரை சுமுகமான முறையில் இடம்பெற்றது. இந்நிலையில் யாழ். மாவட்டத்தில் அஞ்சல்மூல வாக்களிப்பையும் கருத்திற்கொண்டு மொத்தமாக 65.9 வீதமான வாக்களிப்புப் பதிவாகியுள்ளதாக யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார். (ம-125-26-66)

**நேற்றிரவு...**

நடவடிக்கையை சுமுகமாக நடத்தவே ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதாக அரச தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. (அ)

**வாக்குச்...**

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வாக்களிப்பு நிலையமொன்றில் (நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை) இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தனது வாக்காளர் அட்டையைக் காண்பித்து அடையாளத்தை உறுதிப்படுத்தி வாக்குச் சீட்டினைக் கைகளில் பெற்ற பின்னர் குறித்த இளைஞன் வாக்களிக்காது அதனைக் கிழித்துள்ளார். இதனை அங்கிருந்த அதிகாரிகள் கவனித்துப் பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்துப் பொலிஸார் அந்த இளைஞனைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனிடம் பொலிஸார் மற்றும் தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணையின் போது இளைஞன் தேர்தலில் வாக்களிப்பது இதுவே முதற் தடவை எனவும், வாக்களிக்கும் முறைமை பற்றிய தெளிவின்மையாலேயே இவ்வாறு அவர் செய்தார் என்றும் தெரியவந்துள்ளது.

இதேவேளை - தேர்தல் ஆணைக்குழுவுக்குச் சம்பவம் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கமைய அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-20-66-26)

**சட்டம்...**

நாட்டுவதற்காகவே அன்றி வேறு எந்த காரணங்களுக்காகவும் இருக்காதென நம்புவதாக தேசிய மக்கள் சக்தி விசேட அறிக்கையொன்றை விடுத்து தெரிவித்துள்ளது.

'வாக்குகளை எண்ணும் பணியில் எந்த தலையீடும் இருக்காத வகையில் தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் செயற்படவேண்டும் என்பதுடன் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டியது பாதுகாப்பு அதிகாரிகளின் பொறுப்பு' என்றும் தேசிய மக்கள் சக்தி அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

**உச்சக்கட்ட...**

200க்கும்மேற்பட்ட விமானப்படையினர் குவிக்கப்பட்டு கடும் பாதுகாப்பு நடவடிக்கையில் அவர்கள் ஈடுபடுத்தப் பட்டனர். (அ-ம)

**முல்லைத்தீவில்...**

பரந்தன் வீதியில் இராணுவத்தினரால் வீதித்தடைகள் அமைக்கப்பட்டன.

புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியிலும் இராணுவத்தால் வீதித்தடைகள் போடப்பட்டுள்ள நிலையில், பொலிஸ் பாதுகாப்பும் பரவலாகப் பலப்படுத்தப்பட்டுள்ளது. (அ-ம-19)

**நாளை...**

உள்நாட்டலுவல்கள் அமைச்சு நேற்றுச் சனிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-66)

## தபால்மூல வாக்களிப்பு முடிவுகள் சில...

### இரத்தினபுரி

| | |
|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | 19185 |
| ரணில் விக்கிரமசிங்க | 6641 |
| சஜித் பிரேமதாஸ | 4675 |
| நாமல் ராஜபக்ச | 500 |
| அரியநேந்திரன் | 03 |

### திகாமடுல்ல

| | |
|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | 11120 |
| ரணில் விக்கிரமசிங்க | 6719 |
| சஜித் பிரேமதாஸ | 7368 |
| நாமல் ராஜபக்ச | 318 |
| அரியநேந்திரன் | 233 |

### அம்பாறை

| | |
|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | 14482 |
| சஜித் பிரேமதாஸ | 3397 |
| ரணில் விக்கிரமசிங்க | 2502 |
| நாமல் ராஜபக்ச | 819 |
| அரியநேந்திரன் | 05 |

### காலி

| | |
|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | 25892 |
| ரணில் விக்கிரமசிங்க | 7226 |
| சஜித் பிரேமதாஸ | 5338 |
| நாமல் ராஜபக்ச | 863 |
| அரியநேந்திரன் | 03 |

## அலி சப்ரிக்கு வந்த பெருமை

ஜனாதிபதித் தேர்தலின் முடிவு எவ்வாறாக இருந்தாலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அணியின் ஓர் அங்கமாக இருந்ததில் மகிழ்ச்சியே என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

வெளியே இருந்து அனைத்தையும் விமர்சிப்பது இலகுவான விடயமாகும். ஆனால் அக்காலப் பகுதியில் பொறுப்பை ஏற்று, சவால்களை உரியவாறு கையாள்வதற்கு மட்டற்ற துணிவும் அர்ப்பணிப்பும் இன்றியமையாதனவாகும். இப்போது திரும்பிப் பார்க்கையில், நாட்டுக்கு மிக அவசியமாக இருந்த வேளையில் நாம் பொறுப்பேற்று உரிய தீர்வினை வழங்கினோம் என்பதிலும், எமது நாட்டைக் கட்டியெழுப்புவதை முன்னிறுத்தி எம்மிடமிருந்த அனைத்தையும் வழங்கினோம் என்பதிலும் நான் மிகுந்த பெருமிதமடைகின்றேன் என்றும் அலி சப்ரி மேலும் தெரிவித்துள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நாகர்கோவில் படுகொலையின் 29ஆம் நினைவேந்தல் இன்று!

யாழ்ப்பாணம் நாகர்கோவில் மகா வித்தியாலயத்தின் மீதான தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் 29ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை மேற்படி பாடசாலை முன்றலில் அமைந்துள்ள நினைவுத் தூபியடியில் கடைப்பிடிக்கப்படவுள்ளது.1995ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி இலங்கை விமானப் படையின் புக்காரா விமானம் நாகர்கோவில் மகா வித்தியாலயம்மீது இரண்டு குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியிருந்தது. குறித்த சம்பவத்தில் பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருந்த 21 மாணவர்கள் உள்ளிட்ட 39 பேர் உயிரிழந்ததுடன் 35க்கும் மேற்பட்ட மாணவர்கள் உட்படப் பலரும் படுகாயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-66)

## இந்தியத் தூதரக அதிகாரி மர்மமான முறையில் சாவு



வொஷிங்டன், செப். 22

அமெரிக்காவின் வொஷிங்டனில் இந்தியத் தூதரக அதிகாரி ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

அவரது உடல் அலுவலக வளாகத்தில் மீட்கப்பட்ட தாகக் கூறப்படும் நிலையில், இந்தியத் தூதரக அதிகாரி எப்படி இறந்தார்? என்பது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தியப் பிரதமர் மோடி நேற்று அமெரிக்காவுக்குச் சென்றுள்ள நிலையில், தூதரக அதிகாரியொருவர் மர்மமான முறையில் உயிரிழந்திருப்பது கூடுதல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தூதரக அதிகாரியின் இறப்புத் தொடர்பான விசாரணைகளின் பின்னர், அவருடைய சடலத்தை இந்தியாவுக்குக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும், இறந்தவர் தொடர்பான கூடுதல் விவரங்கள்குடும்பத்தின் தனியுரிமைக்காக வெளியிடப்படவில்லை என்றும் இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது. (ம)

**பணியாளர் தேவை**

அங்கர் கிளினிங் சேவை நிறுவனம் - சுத்திகரிப்பு பணியாளர் தேவை.
இடம் : தெல்லிப்பளை.
மந்திகை

**T.P:775396350**

**ENGLISH CLASSES**

GRADE 1 - 5 - ENGLISH LANGUAGE
GRADE 6 - O/L - ENGLISH GRAMMAR
இடம் - பிரபல பாடசாலைகளுக்கு அருகில், யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு :-

**071 389 4989**

**காணி விற்பனைக்கு**

- பெரியவிளானில் 23 பரப்புக் காணி விற்பனைக்கு (தோட்டக்காணி. காபெற் வீதியிலிருந்து 2 வது காணி) விலை பேசித் தீர்மானிக்கலாம்.
- வசாவிளானில் 56 பரப்புக் காணி விற்பனைக்கு தோட்டம் செய்ய பண்ணை அமைக்க சிறந்த காணி.
- அரியாலையில் 48 பரப்புக் காணி விற்பனைக்கு (குறைந்த விலையில் பண்ணை அமைக்க. சோலர் திட்டத்திற்கு உகந்த காணி)
- தரகர் தேவையில்லை உரிமையாளருடன் நேரடித் தொடர்புக்கு.

**077 423 5458**
**077 262 7581**

**காணி விற்பனைக்கு**

மருதனார்மடம் உரும்பிராய் வீதி
1 3/4 பரப்பு. 2 பரப்பு.
திருநெல்வேலி - நாவலடி வீதி
1 பரப்பும் 5.22 குளியும்
(CS 1416) V-1

**077 104 8865**

**வாடகைக்குத் தேவை**

யாழ் நகரப் பகுதிக்குள் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள உணவகம் (Restaurant) ஒன்றிற்கு கடை / வீடு வாடகைக்குத் தேவை.
(CS/55266) J-1

**076 803 5352, 071 924 6420**

**காணி விற்பனைக்கு**

யாழ் மயிலிட்டி காங்கேசன் துறையில் 8 1/2. பரப்பு காணி விற்பனைக்குண்டு.
விலை பரப்பு 17 லட்சம்

தொடர்பு: **074 234 3241**

**வேலையாட்கள் தேவை**

உணவகம் ஒன்றிற்கு கொத்து. றைஸ். ரொட்டி வேலை தெரிந்தவர்கள் தேவை.
(CS/1408) J-1

**077 203 0625**

**இரண்டாம் மொழி சிங்கள வகுப்புகள்**


2025 ம் ஆண்டு தரம் 6 மாணவர்களுக்கான 2ம் மொழி சிங்கள வகுப்புகள் ஆரம்பம்.
23.09.2024 திங்கட்கிழமை
மாலை 3.00 மணியளவில்.
இடம் - இலங்கை வேந்தன் திருமண மண்டப அருகில் நீராவியடியில்.
தொடர்புகளுக்கு:-
(CS/56236) J-1

**077 990 6867, 077 214 0220**

# மரண அறிவித்தல்

## தம்பு இராமச்சந்திரன்

(முன்னாள் கொழும்பு பிரபல வர்த்தகர்)



தோற்றம்
18.08.1944

மறைவு
19.09.2024

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு இராமச்சந்திரன் அவர்கள் கடந்த (19.09.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான நல்லதம்பி (இளைப்பாறிய ஆசிரியர்) - கற்பகம் தம்பதியரின் அன்பு மருமகனும். பர்வதபத்தினியின் அன்புக் கணவரும். சந்திரிகா (கனடா). சந்திரஹாசன் (பிரான்ஸ்). சந்திரதாசன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும். சத்தியமூர்த்தி (கனடா). மஞ்சுளா (பிரான்ஸ்). நிசாந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும். காலஞ்சென்றவர்களான விவேகம்மா. சிவபாதசுந்தரம். ஈஸ்வரலிங்கம். கமலாதேவி ஆகியோரின் அருமைச் சகோதரரும். ஜெகதாம்பாள், செல்வராணி, காலஞ்சென்ற சிவனேசன் மற்றும் சிவராசன். காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் திருஞானசம்பந்தர். சத்தியலட்சுமி. விஜயலட்சுமி. நடராஜா. சிவசோதி. அமுதகௌரி ஆகியோரின் அன்பு மைத்துனரும். தர்சனா. அபிராமி. கோகுலன். சிவராமி. கோபிகா. அனுசா. அரின். அதிதி ஆகியோரின் அன்புப் பேரனும். சாய்ஜேயின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புங்குடுதீவிலுள்ள அன்னாரது இல்லத்தில் நாளை (23.09.2024) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முனையப் புலம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் :**
**மனைவி, பிள்ளைகள்.**
**T.P - 077 614 6713 (மனைவி)**
**077 359 0924**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் விக்கினேஸ்வராய நமஹ" ஓம் அம்மாபகவான் துணை

# ஏழாம் ஆண்டு நினைவலைகளுடன்

தோற்றம் 02 • 04 • 1944

மறைவு 22 • 09 • 2017



## அமரர் பொன்னம்பலம் நாகரத்தினம் (J.P)

**(அகில இலங்கை சமாதான நீதவான், ஓய்வு நிலை பொறியியலாளர், இலங்கை போக்குவரத்துச் சபை)**

ஆண்டுகள் ஏழு ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகளைச் சுமந்தபடி
நித்தம் உம்மைத் தேடி ஏங்குகின்றேன் !
எனைப்பிரிந்து நெடுந்தூரம் சென்று மறைந்ததென்ன?
கவிதைகள் பல எழுதிக் காதலித்துக் கரம் பிடித்தீர்!
கண்ணிமை போல் காலமெல்லாம் எனை
அரவணைத்துக் காத்து வந்தீர்!
ஐம்பத்தொரு வருடங்கள் சிறப்பாக வாழ்ந்து வந்தோம்...
புலமைப்பரிசில் கல்விக்காய் சேர்ந்தே சேவை செய்தோம்...
மீள் பரிசீலனை முறை உருவாக வழிவகுத்தோம்...
என்னைத் தவிக்கவிட்டு இடைநடுவில் மறைந்ததென்ன?
சிறப்பாக என்னை வாழவைத்துச் சென்றவரே!

செல்லும் இடமெல்லாம் உங்கள் புகழ் கேட்கின்றேன்
இதைவிடவா பெருமை எனக்குண்டு இவ்வுலகில்
எண்ணி எண்ணி நாளும் பெருமிதமே கொள்கின்றேன்.
நீங்கள் தந்த வீட்டில் நித்தம் உமைத் தொழுகின்றேன்!
பார்போற்றும் பாரதிக்கு தவறாமல் விழாஎடுத்த பாவலனே!
பாரதி பிறந்த மாதமதில் பரமனடி சேர்ந்தீரே!
தனிமை என்னை வாட்டி வதைக்கின்றதே!
உங்கள் நினைவு என்னை அணைத்துச் செல்கின்றதே!
உங்களைச் சேரும் நாளை எண்ணி வாடுகின்றேன்...
மீண்டும் நாம் இணைந்திடுவோம்...
அந்த நாளை எண்ணி எண்ணி ஆவலுடன் காத்திருப்பேன்.

**என்றும் உங்கள் நீங்காத நினைவுகளுடன் வாழும்**
**உங்கள் ஆருயிர் மனைவி**

சின்னாலடி, காரைநகர்.

(CS/1393) J-1

---

### வீடு வாடகைக்கு

நாச்சிமார் கோவிலுக்கும், கலட்டிச் சந்திக்கும் இடையில் அமைந்துள்ள 3 அறைகள், 2 குளியலறைகள், நவீன வசதிகளுடன் கூடிய புதிய வீட்டின் மேல்பகுதி மட்டும் வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் நடாத்துவதற்கு உகந்தது.

T.P. 0768 245 652

(CS/30) J-1

### Van விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள
Lite ACE 57-xxxx
வேன் (Van)
விற்பனைக்கு உண்டு.

077 217 4741, 071 847 4325

(CS/56258) J-1

### ஹொட்டல் வேலைக்கு

ஹொட்டல் ஒன்றிற்கு
காசாளர், வெயிட்டர்,
றொட்டிமேக்கர்,
வீட்டுப்பணிப்பெண் தேவை.
தொடர்புகளுக்கு:-

072 914 4520

(CS/56247 B) J-1

### வீடு வாடகைக்கு

மருதனார்மடம் பிரதான வீதியில்
வீடு வாடகைக்கு உண்டு.
அரச/ அரசசார்பற்ற நிறுவனங்கள்
விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:-

072 914 4520

(CS/56247 A) J-1

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கு
அருகில் உள்ள
3ம் குறுக்குத்தெருவில் வீட்டுடன்
அமைந்த 3 பரப்புக் காணி நல்ல
தண்ணீர் கிணற்றுடன்
விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-

+614 815 34634, 077 751 3687

(CS/1347) J-1

---

### கிளிநொச்சி மாவட்டத்தில் 68.66 % வாக்களிப்பு!

ஜனாதிபதித் தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் 68.66 வீதமான வாக்குப் பதிவு இடம்பெற்றிருப்பதாக தெரிவத்தாட்சி அலுவலகம் அறிவித்துள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை ஒரு லட்சத்து 907 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள நிலையில், 69 ஆயிரத்து 287 பேர் வாக்களித்துள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-113)

---

## அருள்மிகு ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில் இணுவில் தெற்கு, யாழ்ப்பாணம்.

## கேதார கௌரி நோன்பு - 2024



"காப்பெடுக்க வந்தேனே கௌரி அம்மாள் தாயாரே!,, காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே!

கருவறையில் எம்பெருமான் திருவருள் மழை பொழிய செந்தமிழால் வழிபாடு காண்கின்ற ஞானலிங்கப் பெருமான் திருக்கோயிலிலே கேதார கௌரி விரதம் இம்முறை மிகமிகச் சிறப்பாக இடம்பெறத் திருவருள் கைகூடியுள்ளது.

தினமும் மாலை 6.00மணிக்கு சிவலிங்க பூசையை அடியவர்கள் ஒவ்வொரு வரும் தாங்களே தமது கரங்களினால் செய்து கொள்ள முடியும்.

விரத காலம் 12.10.2024 சனிக்கிழமை தொடக்கம் 01.11.2024 வெள்ளிக்கிழமை வரை தினமும் செந்தமிழில் வழிபாடுகள் நடைபெறும்.

தினசரி திருவிளக்குப் பூசை, சிவலிங்கப் பூசை மாலை 6.00மணிக்கு நடைபெறும்.

01.11.2024 நிறைவுநாள் வழிபாடுகள் காலை 8.00மணிக்கு ஆரம்பமாகும்.

திருவிளக்குப் பூசைக்கும் சிவலிங்கப் பூசைக்கும் காப்பெடுக்கவும் விரும்புகின்ற அடியவர்கள் ஆலய கருமபீடத்தில் தமது பெயர் விபரங்களை முற்பதிவு செய்யவும்.

சைவநெறிக்கூடம்
அருள்மிகு ஞானாம்பிகை உடனாய
ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில்
இணுவில்.

தொ. இல : 0212243545

---

## யோக சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லம்

## பணிநிலை வெற்றிடம்

எமது இல்லத்தில் கீழ் காணும் பணிநிலைகளுக்கான விண்ணப்பம் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

**01. முகாமையாளர் ( ஆண் )**

கல்வித் தகைமை :- க.பொ.த உயர் தரம் (A/L) அரச தனியார் நிறுவனமொன்றில் குறைந்தது 05 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய அனுபவம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
வயது :- 40 - 65.
அடிப்படைச்சம்பளம்:- 40,000ரூபாவிற்கு மேல் (இதர படிகளும் மற்றும் உணவு, தங்குமிடம் என்பன இலவசம்.)
EPF, ETF என்பன வழங்கப்படும்.

**02.சாரதி ( ஆண் )**

சாதாரண/கனரக வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம்.
வயது :- 25 - 45
சம்பளம் :- 30,000 ரூபாவிற்கு மேல் (இதர படிகளும் மற்றும் உணவு, தங்குமிடம் என்பன இலவசம்.)
EPF, ETF என்பன வழங்கப்படும்.
முன் அனுபவம் விரும்பத்தக்கது.

**03.சமையலாளர் ( ஆண் )**

வயது :- 30 - 60
சம்பளம் :- 40,000 ரூபாவிற்கு மேல் (இதர படிகளும் மற்றும் உணவு, தங்குமிடம் என்பன இலவசம்.)
EPF, ETF என்பன வழங்கப்படும்.
முன் அனுபவம் விரும்பத்தக்கது.

**04.பராமரிப்பாளர் ( ஆண் / பெண் )**

வயது :- 20 40
சம்பளம் :- 30,000 ரூபாவிற்கு மேல் (இதர படிகளும் மற்றும் உணவு, தங்குமிடம் என்பன இலவசம்.)
EPF, ETF என்பன வழங்கப்படும்.

**05.களஞ்சியக்காப்பாளர் ( ஆண் )**

கல்வித் தகைமை :- க.பொ.த உயர்தரம் (A/L)
வயது :- 20 - 50
சம்பளம் :- 30,000 ரூபாவிற்கு மேல் (இதர படிகளும் மற்றும் உணவு, தங்குமிடம் என்பன இலவசம்.)
EPF, ETF என்பன வழங்கப்படும்.
முன் அனுபவம் விரும்பத்தக்கது.

முக்கிய தகைமை :- நல் ஒழுக்கம், உடல் தகைமை என்பவற்றுடன் அனுபவத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும். தெரிவுகள் நேர்முகத்தேர்வின் மூலம் நடைபெறும். நேர்முகத்தேர்விற்கு தகைமைச்சான்றிதழ்கள் காண்பிக்கப்படல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி 15.10.2024.**

விண்ணப்பங்கள் :- தலைவர் / செயலாளர்,
யோக சுவாமிகள் திருவடி நிலைய
முதியோர் இல்லம்,
வன்னேரிக்குளம், கிளிநொச்சி. எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக சமர்ப்பிக்க முடியும்.

15.10.2024ற்கு பின்கிடைக்கும் விண்ணப்பங்கள் எமது இல்ல பணிநிலை நிறைவு செய்யப்படும் வரை செல்லுபடியானதாக கொள்ளப்பட்டு அடுத்த நேர்முகத்தேர்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு :-
அலுவலகம் - 0767099162, தலைவர் - 0775064678, செயலாளர் - 0776495442.

(CS/28102) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

பகைவர் பணிவிடம் நோக்கித் தகஉடையார்
தாமேயும் நாணித் தலைச்செல்லார் காணாய்
இளம்பிறை ஆயக்கால் திங்களைச் சேராது
அணங்கருந் துப்பின் அரா.

—நாலடியார்

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2055 | புரட்டாதி 06 | ஞாயிற்றுக்கிழமை (22. 09.2024) | சிகரம் :219



# திலீபனுக்குள் ஒரு பார்த்தீபம்

எவராலும் நினைத்தே பார்க்க முடியாத, ஒரு துளி நீர் கூட அருந்தாது தம்மை வருத்தி, அகிம்சைப் போரை முன்னெடுத்து ஆகுதியான திலீபனை எல்லோருக்கும் ஒரு போராளியாகவே தெரியும். ஆனால் திலீபனுடன் நெருங்கிப் பழகிய மூத்த ஊடகவியலாளர் ஒருவர், அதே திலீபனுக்குள் ஒளிந்திருந்த பார்த்தீபன் என்ற சிறுவனை வெளிக்கொணர்கின்றார்.

○ அனஜித்

அது அறிமுகமற்ற ஒருவருடனான புதியதும், முதலாவதுமான சந்திப்பாக இருக்கவில்லை என்பது எனக்கு நன்றாக நினைவில் உள்ளது. வீணான கதைகளோ,விமர்சனங்களோ,எதுவுமன்றி ஒரு அதீத தேடல் உணர்வுடன் பல விடயங்களையும் அறிந்துகொள்ள விரையும் ஆர்வம் அவனிடம் இருந்தது.

பல விடயங்கள் பற்றியும் பேசினான்.

"அண்ணா உங்களைச் சந்தித்தது சந்தோஷம்... அடிக்கடி வந்து தொந்தரவு செய்வேன்" என்று சிரித்தபடியே கூறியவன். "தேவையில்லாமல் வந்து கரைச்சல் தரமாட்டேன்" என்றான். மேசையில் கிடந்த புத்தகக் குவியலைப் பார்த்துவிட்டு "புத்தகங்களைப் பார்க்கலாமா?"என்றான். நான் தலையாட்டினேன். அவன் புத்தங்களுடன் உறவாட ஆரம்பித்து விட்டான்.

புறப்படும் போது கேட்டான் "அண்ணா உங்களிடம் ராணி கொமிக்ஸ் இல்லையா?"என்று.

அந்தக் கணத்தில் தீலிபனுள் மறைந்திருந்த "பார்த்தீபன்"என்ற சிறுவனை நான் இனம் கண்டு கொண்டேன்.

★★★★

அதன்பிறகு எத்தனை சந்திப்புக்கள் ,எவ்வளவு உடையாடல்கள், எத்தனை பிரச்சினைகள்.

திலீபனுக்கும் எனக்குமான உணர்வுபூர்வமான கருத்துப் பரிமாற்றங்கள் மரியாதையுடன் கூடிய முதல் அறிமுகம், உரிமையுடன் கூடிய ஒரு உறவாக இறுதிவரை தொடர்ந்தது. பல தடவைகள் திலீபனாகவும் சில தடவைகள் பார்த்தீபனாகவும் அவன் எனக்குத் தன்னை அடையாளப்படுத்தியே வந்துள்ளான்.

'ராணி' கொமிக்ஸ் படிப்பதில் பெருவிருப்புடன் இருந்தவன் பார்த்தீபன். ஆனால் திலீபன் அதற்கு நேர்மாறான இன்னொரு வடிவமாக இருந்தான். போராட்டம் அரசியல்,விடுதலை,சுதந்திரம் என்ற விடயங்கள் குறித்த அனைத்து நூல்களையும் துழாவுவான். அதற்குள் ஊடுருவுவான். அவை தொடர்பான அவன் கேட்கும் கேள்விகள் அவனது சுய தேடலை இனங்காட்டின. இது அவனுக்கும் எனக்குமான ஒரு உரையாடல்.. "திலீபன்... நீ ராணி கொமிக்ஸையும் விழுந்து விழுந்து படிக்கிறாய்,சேகுவேராவையும் படிக்கிறாய்.. இது பெரிய முரணாக இருக்கவில்லையா?" "ஏன் அண்ணா.... ராணி கொமிக்ஸ் சிறுவர் புத்தகம் என்று பார்க்கிறீர்களா?அதைப் படிக்கேக்கை மனம் உற்சாகமாகிறது. சோம்பல் பறந்து போகிறது. ஏதாவது புத்திசாலித்தனமாகச் சாதிக்கத் தோன்றுகிறது. மற்றவை ஆழமாக சிந்திக்க வைக்கின்றன."

★★★★

திலீபத் தீபம் சுடர்விடத் தொடங்கி மூன்று தசாப்தங்களுக்கு மேலாகிவிட்டது. அது அணையாத, எவராலும் என்றைக்குமே அணைக்க முடியாத, எவராலும் அருகே அணுகவும் முடியாத தமிழினத்தின் ஆத்ம தீபம் என்பதை அறிவிலிகளும் உணர்விலிகளும் உணரார்.

அது தன்னைத் தானே சுயம்புவாக, எரியூட்டி ஒளிரச் செய்துகொண்ட தீபம். அது தமிழினத்தின் அடிமை இருள் விலகும்வரை, சுதந்திர ஒளி பரவும் வரை ஒளிர்ந்துகொண்டே இருக்கும். அதனை அதிகார வெறித்தனத்தால் மறைக்க முற்படுவது சூரியஒளியை கைகளால் மறைக்க நினைக்கும் செயற்பாடாகவே அமையும்.

'திலீபன்', சகாப்தத்தில் அதிகார வெறிகொண்டு பதவிக் கதிரைகளில் அமர்ந்தபடி, ஆர்ப்பரித்து ஆரவாரம் செய்து கொண்டிருந்த உள்நாட்டவரும் சரி,அயலகத்தவர்களும் சரி முகவரி இழந்தவர்களாக மறக்கப்பட்டு தேடுவாரற்றும் போய் விட்ட நிலையில் திலீப தீபம் மட்டும் திக்கெட்டும் ஒளிர்கின்றதே...!

சட்டத்தாலும், அதிகார ஆணைகளாலும், திலீபன் நினைவுகளுடன் தீபமேற்றி அஞ்சலிப்போரை மட்டுமே மிரட்டவும் தடுக்கவும் முடியலாம். ஆனால் தன்னைத்தானே விடுதலைக்கான வழிகாட்டும் தீபமாக ஒளிவிட்டுக்கொண்டு , அணையா விளக்காக சுடரும் 'பார்த்தீபம்'வல்லாதிக்க மேலாதிக்க சக்திகளுக்கு ஒரு போதுமே கட்டுப்படாது.

ஒவ்வொரு மனிதநேயனும், சுதந்திரப்பிரியரும் ,விடுதலைப் பயணியும் தமிழ் உணர்வாளனும் கண்களை மூடினால் அவனுள்ளே திலீபச் சுடர் ஒளிர்ந்து கொண்டே இருக்கும்.

ஒரு சில அதிகார சக்திகளால் ஒரு தனிமனிதனின் ஆன்ம பலத்தை அடக்கி விடமுடியவே முடியாது. அது 'பாரொடு விண்ணாக'பரந்த சோதிப்பிழம்பைப் போன்றது.

அது தமிழினத்துக்கு காலம் கையளித்த அணையா ஒளி விளக்கு.....

அந்த மகத்தான சக்தியை - திலீப தீபத்தை நினைக்கும் போதெல்லாம் அவன் குறித்த 'பார்த்தீப' பதிவுகள் மனதில் எழவே செய்கின்றன.

அந்த மகா ஆத்மாவுள் மறைந்திருந்த. மனித ஆத்மா பதிந்து விட்டுச் சென்ற எவ்வளவோ செய்திகள் மேலெழும்போது, திலீபனை நினைவில் வைத்துவிட்டு பார்த்தீபனை மறந்துவிட்டீர்களா என்று அவன் கேட்பது போலிருக்கிறது.

அவனோடு பார்த்து ,பேசி ,பணியாற்றி ,பழகிய நாள்கள் வெறுமனே மூன்றாண்டு காலப்பகுதிக்குள்ளே அடங்கும். அந்தக் காலப்பகுதியானது எவ்வளவு வேகமாகவும், இலக்கு நோக்கியும் , அதே சமயம் அர்த்தமுள்ளதாகவும், மறக்கவே முடியாததாகவும் அமைந்திருந்தது என்பதை இப்போது நினைக்கப் பிரமிப்பாக இருக்கிறது.

★★★★

*1985 களின் நடுப்பகுதி .*

ஒருநாள் எனக்குத் தெரிந்த ஒரு இளைஞர் , ஒழுங்காகச் சீவி விடப்படாத அடர்ந்த தலைமுடி, அகன்ற 'பிரேமுடன்'கண்ணாடி அணிந்த, முகம், மெலிந்து உயர்ந்த தோற்றம், தொளதொளப்பாக அரைக்கை வரையும் மடித்திருந்த சட்டை, எதனையோ தீவிரமாகத் தேடும் கண்கள் போன்ற அம்சங்களுடன் தோன்றிய இன்னொரு இளைஞனை அழைந்து வந்து "அண்ணா இவர்தான் நான் சொன்ன திலீபன்"என எனக்கு அறிமுகப்படுத்திவிட்டு, " அண்ணாவுடன் கதைச்சுக்கொண்டிருங்கள் அரை மணித்தியாலயத்தில் வந்து விடுகிறேன்"என்று விட்டுவிட்டுப் போய்விட்டார்.

எனக்கு அருகில் வந்த அந்த இளைஞர் "ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறீர்கள்...நாங்கள் குழப்பிவிட்டோமா தெரியவில்லை. மன்னிக்கவும்"என்றார். ".... இல்லை .... நீங்கள் செல்லுங்கோ தம்பி"என்றேன்.

அவர் உடனே...."நான் திலீபன்.."என்றே தன்னை அறிமுகப்படுத்திவிட்டு, என் மூலமான தங்கள் தேவைகளையும் விபரித்தான். நான் மௌனமாக அவன் செல்வதைக் கேட்டுவிட்டு " திலீபன் என்பது தான் உங்கள் சொந்தப் பெயரா?"என்றேன்.

"இல்லை அண்ணா, எனது சொந்தப் பெயர் பார்த்தீபன்..ஏன் திலீபன் நல்ல பெயரில்லையா?" என்றான் சிரித்தபடி. "இல்லை எனக்கு பிடித்த பெயர்..குமுதத்தில் வெளி வந்த ஜாவர் சீத்தா ராமனின் தொடர்கதையான 'உடல் பொருள் ஆனந்தி ' என்ற கதையின் நாயகன் பெயர் திலீபன். அதைவிடவும் நம் நாட்டுக் கவிஞர் சில்லையூர் செல்வராசன் எழுத்தாளர்-மல்லிகை டொம்னிக் ஜீவா ஆகியோரின் பிள்ளைகளுக்கும் பெயர் திலீபன் தான்.."என்றேன்.

அவன் சிரித்துக்கொண்டே "எல்லாத்தையும் ஞாபகத்தில் வைத்திருக்கிறீர்களே...!" என்றவன் தொடர்ந்து பல விடயங்களைப் பற்றி பேசினான். தர்க்கித்தான். விளக்கம் கேட்டான். அவை குறித்த தனது எண்ணங்களையும் பரிமாறினான்.

"கொமிக்ஸ் உடலைப் பலப்படுத்துகிறது. பெரிய புத்தகங்கள் அறிவை பலப்படுத்துகின்றன என்று தான் நான் நினைக்கிறேன்..." என்று தன் விளக்கத்தையும் சொன்னான் திலீபன்.

எப்படி ஒருவனால் பார்த்தீபனாகவும் அதே சமயம் திலீபனாகவும் இயங்க முடிகிறது என்பதை அவன் சுலபமாக இனங்காட்டிய சம்பவம் இது.

★★★

மருத்துவமனையில் ஒரு சிறு சத்திர சிகிச்சைக் குள்ளாகியிருந்த சமயம் அவனைப் பார்க்கச் சென்றிருந்தேன். கையில் பழவகைகள் அடங்கிய ஒரு பை. கட்டிலில் படுத்திருந்தான் . என்னைக் கண்டதும் வழமையான அதே சிரிப்புடன் வரவேற்றான் ... பையை அருகே வைத்தேன்.

"என்னண்ணா கொண்டு வந்திருக்கிறாய்?"

"கொஞ்சம் பழங்கள் இருக்கு"

"சீ!விசரே எனக்கேன் பழங்கள்? கொஞ்சம் கண்டொஸ்... கொண்டுவந்திருக்கலாமே...."

நான் அதிர்ந்து போனேன்..

நான் திலீபனைத் தான் பார்க்கச் சென்றேன். ஆனால் அங்கு என்னோடு பேசியது..ராணி கொமிக்ஸ் வாசகனான சிறுவன் பார்த்தீபன்தான். புரிந்து கொண்டேன். உடனே வெளியே போய், "கண்டொஸ்'களுடன் திரும்பினேன்.

★★★★

ஒரு சமயம் என் வீட்டுக்கு, ஏதையோ பற்றிக் கதைக்க வந்திருந்தான் . வாசலில் எனது பிள்ளைகள் இருவரும் விளையாடிக்கொண்டிருந்தனர். வந்திறங்கியவன் வாசலில் இருந்த அவர்களுடன் தானும் ஒருவனாக அமர்ந்து விளையாட ஆரம்பித்து விட்டான்.

எனது மகன் கீழே கிடந்த விளையாட்டுத் துப்பாக்கியை எடுத்து திலீபனிடம் கொடுத்து அங்கே கிடந்த 'நாய் பொம்மை ஒன்றைக்காட்டி"மாமா.. அதைச் சுடு"என்றான்.

உடனே திலீபன் "நாய்க்குட்டி பாவம் .அதைச் சுடக்கூடாது.."என்ற படி துப்பாக்கியைக் கீழே போட்டுவிட்டு நாய்க்குட்டிப் பொம்மையை தடவிக்காட்டினான்.

அந்தச் சமயத்தில் தீலிபனை அங்கு நான் காணவில்லை பார்த்தீபனையே என்னால் தரிசிக்க முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வின் எழுச்சிக்கு உதவும் கல்வியும், சமூகமயமாக்கலும்

நஸ்ஹத் நௌஸாத்
2ஆம் வருட சிறப்புக்கற்கை
கல்வி, பிள்ளை நலத்துறை,
கிழக்கு பல்கலைக்கழகம்.



மனித வளர்ச்சிப் பயணத்தில் கல்வியும், சமூகமயமாக்கலும் இரட்டைத் தூண்களாகக் காணப்படுகின்றன. அவை நம் வாழ்க்கையையும் சமூகக் கட்டமைப்பையும் வடிவமைப்பதுடன் நவீன உலகின் சிக்கல்களை வழிநடத்த தனிநபர்களைத் தயார்படுத்தி சமூக ஒற்றுமை மற்றும் வளர்ச்சியைத் தூண்டுவதில் முக்கியமான பங்கு வகிக்கின்றன. அந்த அடிப்படையில், கல்வியானது தொழில்முறை வெற்றிக்குத் தேவையான அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், அணுகுமுறைகளை வழங்குகின்றது. இன்னும் கட்டமைக்கப்பட்டதொரு வாழ்க்கை முறையையும் அளிக்கின்றது. இதனை நாம் விமர்சன ரீதியாக சிந்திக்கவும், பிரச்சினைகளைத் தீர்க்கவும், பலதரப்பட்ட விடயப்பரப்புகளில் ஈடுபட்டு முன்னேற்றமடைவதற்கும், கற்றுக்கொள்வதற்கும் முடிகிறது. ஆரம்பநிலைக் கல்வியிலிருந்து உயர்கல்வி வரை கற்பிக்கும் முறையான மற்றும் முறைசாரா கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள், எமது அறிவாற்றல், நடைமுறை வளர்ச்சிக்கு பங்காற்றுவதுடன் எதிர்காலத்தில் எதிர்நோக்க வேண்டிய சவால்கள் , வாய்ப்புகளுக்கு எம்மைத் தயார்படுத்துகின்றன.

சமூகமயமாக்கல் என்பது வாழ்நாள் முழுவதும் தொடர்கின்றதொரு செயன்முறையாகும். இதனூடாக, எமது சமூகச் சூழலில் திறம்பட தொடர்புகொள்வதற்கு அவசியமான விதிமுறைகள், நடைமுறைகளை கற்றுக் கொள்கின்றோம். இது குடும்பம் உட்பட நட்பு, சமவயதுக் குழுக்கள், அயலவர்கள், கல்வி நிறுவனங்கள், ஊடகங்கள்,நேரடியான அவதானிப்பு , வேலை புரியுமிடங்கள் ஆகியவற்றுடன் தொடர்புகொள்வது வரை நீண்டுள்ளது. சமூகமயமாக்கல் என்பது நுண்ணறிவுத்திறன் மற்றும் தனிநபர் உணர்வுகளைத்தூண்டி, வளர்க்கவும் உதவுகிறது. அத்துடன், எம்மையும் பிறரையும் எப்படி உணர்கிறோம் என்பதில் தாக்கம் செலுத்துவதுடன் எமது தனிப்பட்ட அடையாளங்கள் சமூகத்தில் எமக்குள்ள பாத்திரங்களை வடிவமைக்கின்றன. ஒரு தனிநபர் எவ்வித இன, மத, கலாசாரமுமின்றி பிறக்கின்றான். அத்தகைய நபருக்கு சமூகம் ஏற்றுக்கொண்ட நோக்கம், குணவியல்புகளை வழங்கி தேவையான ஆளுமையை விருத்தி செய்து சமூகத்திற்கேற்ற பிரஜையாக மாற்றுதல் சமூகமயமாக்கலாகும். இச்சமூகமயமாக்கலானது குழந்தைப் பருவத்திலிருந்து முதுமைப் பருவம் வரை ஏற்படுவதனைக் காணமுடியும். ஓர் அடிப்படைச் சமூகத்தொடர்பாக தாய்சேய் தொடர்பை குறிப்பிடலாம். இதற்கடுத்து ஒரு குழந்தை தன்னைச் சுற்றிக் காணப்படும் குழுக்களுடன் தொடர்பு கொள்ளத் தொடங்குகிறது. ஒரு குழந்தைக்கும் அதன் விளையாட்டுக் குழுவுக்கு முள்ள தொடர்பு, அதன் வகுப்பிலுள்ள பிற குழந்தைகளுக்குமுள்ள தொடர்பு இத்தகையதாகும்.

இவை போன்ற சமூகத் தொடர்புகளினால் தான் அதன் ஆளுமை உருப்பெறத் தொடங்குகிறது. இந்நிலைக்குப் பின்னர்க் குழந்தைகளுக்கிடையே சமூகத் தொடர்பு தீவிரப்படுகிறது. ஒவ்வொரு தனிமனிதனும் ஒவ்வொரு விதத்தில் சமூகமயமாக்கலுக்கு உட்படுத்தப்படுகின்றான். அவற்றில் சாதகமான காரணிகளும் , பாதகமான காரணிகளும் செல்வாக்கு செலுத்துகின்றன. சாதகமான காரணிகளில் குடும்பங்கள், சமய நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், இளைஞர் மற்றும் முதியோர் இயக்கங்கள், விளையாட்டுக் குழுக்கள், நூல்கள் எனத் தொடரும். அதேசமயம், பாதகமான காரணிகளாக மோசமான நண்பர்கள் ,கெட்ட சினிமா, கலவரங்கள், இடம்பெயர்வுகள், யுத்தங்கள், இயற்கை அனர்த்தங்கள் என்பவற்றைக் குறிப்பிட முடியும். சமூகமயமாக்கலின் போது எமக்கு பல்வேறு விதமான நன்மைகள் ஏற்படுகின்றன. அதாவது, தனிநபரை சமூகத்திற்கேற்ற விதத்தில் மாற்றியமைத்தல் எமது சமூகச் சூழலை உணர்ந்து அதன்படி செயற்பட முடியுமானதாக இருத்தல், நல்ல நபர்களோடு சிறந்த தொடர்பாடலை ஏற்படுத்த உதவுதல், ஒவ்வொரு தனிநபரும் தங்களது ஆற்றல்களை வளர்த்து தங்களை அடையாளம் காண உதவக்கூடியதாக அமைதல் என்பவைகளைக் குறிப்பிட முடியும்.

சமூகமயமாக்கலில் குடும்பங்களும் பாடசாலைகளும் மிகப்பெரிய பங்கை வகிக்கின்றன. அவற்றில் குடும்பங்களானது, ஒவ்வொரு தனிநபரின் நடத்தைப்பாங்குகள், மனவெழுச்சிகள், கருத்துப் பரிமாற்றங்கள் , தொடர்பாடல்கள், சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகளைத்தீர்க்க பழகுதல் போன்றவைகளும், பாடசாலைகளானது அறிவு, திறன், மனப்பாங்கு என்பவைகளை விருத்தி செய்தல், தலைமைத்துவப் பயிற்சியை விருத்தி செய்தல், பல்கலாசார மக்களை, அவர்களது கலாசாரங்களை இணங்கண்டு மதித்தல், விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு, குழுவாக இயங்கச் செய்தல் போன்றவைகளாகும். சமூகம் எவ்வழியோ கல்வியும் கல்வி நிலையங்களும் அவ்வழி என்பதே நடப்பியல். நடப்புச் சமூக இயல்புக்கு ஏற்றவாறு மாணவர்களைத் தயார்ப்படுத்தலும், இசைவுள்ளவர்களாக உருவாக்கித் தருதலும் பாடசாலைகளால் மேற்கொள்ளப்படுகின்றன. சமூகத்துடன் இசைந்து வாழத்தக்க அறிவையும்,அனுபவங்களையும் வரன்முறையான கல்விச் செயற்பாடுகள் வாயிலாகவும், வரன்முறை சாராச் செயற்பாடுகள் வாயிலாகவும் வழங்கும் கல்வி நிலையங்களினால் வழங்கப்படுகின்றன.

சமூகமயமாக்கலின் ஊடாக சமூகத்தை இணங்காணல், ஒன்றுபட்டு வாழ்தல், சமூகத் தேவைகளைக் கண்டறிந்து உதவி புரிதல், சமூக சூழ்நிலைகளுக்கேற்ப தங்களை மாற்றியமைத்து செயற்படல், சமநிலைத்தன்மை வளர்ச்சியடைதல் போன்றவைகளை சமூகமயமாக்கலின் முக்கியத்துவங்களாகக் குறிப்பிடலாம். இடைவினைகள் அல்லது ஊடாட்டங்கள் சமூகமயமாக்கலை முன்னெடுக்கும் நடவடிக்கைகளுள் முக்கியமானதாக கருதப்படுகின்றன. இடைவினைகள் உடனடியான நடவடிக்கையாக மட்டும் அமையாது எதிர்காலச் செயற்பாடுகளுக்கு ஆற்றல் மிக்க பயிற்சியாக உள்ளார்ந்த வலுவைக் கட்டியெழுப்புகின்றன. இன்றைய கல்வியின் நோக்கங்களில் முக்கியமான ஒன்று சமுதாய வளர்ச்சிக்கு உதவுவதாகும். மக்களது வாழ்க்கை நிலையினை உயர்த்த சமூகத்தினால் மேற்கொள்ளப்படும் எல்லா முயற்சிகளையும் ஆக்க முறையிலே உடனடியாக ஊக்குவித்து இசைப்படுத்திச் செயல்படுத்தலில் கல்வி நிலையங்கள் பங்கேற்க வேண்டும்.

முன்பு சமுதாயங்கள் சுருங்கிய பரப்பினைக் கொண்டிருந்தன. இன்று தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியின் விளைவாகவும் கல்வி வளர்ச்சியின் விளைவாகவும் சமுதாயம் எனப்படும் சொல்லின் பொருள் மக்கள் சமுதாயம் முழுமையையும் குறிக்கும் பரந்த பொருளினை பெற்றுள்ளது. சமுதாயத்தின் பண்புகளையும் தேவைகளையும் பிரதிபலிப்பாக கல்வி விளங்க வேண்டும். சமுதாயத் தேவைகள், பிரச்சினைகள் ஆகியவற்றின் அடிப்படையில் பாடசாலை கல்வி நிலையங்கள் செயற்படவேண்டும். சமுதாய வாழ்க்கையில் சுருங்கிய பதிப்பாக அதன் கல்வி செயற்பாடு காணப்பட வேண்டும். அதன் செயல்முறைகள் சமுதாயத்தில் காணப்படும் செயல்களுக்கு ஒப்ப அமைய வேண்டும். "சமுதாய வாழ்க்கையில் காணப்படும் எல்லா சிறப்பு பண்புகளையும் கூறுகளையும் பிரதிபலிப்பதாக அவை அமைய வேண்டும்" என்று சையதின் குறிப்பிடுகிறார். எனவேதான், பயனுள்ள கல்வி செயற்பாடுகளை வளர்ப்பதற்கும், நேர்மறையான சமூக விளைவுகளை ஊக்குவிப்பதற்கும் கல்வி சமூகமயமாக்கல் அம்சங்களைப் புரிந்து கொள்வது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளி

விசும்பின் துளி வீழின் அல்லால்...




# நல்லூர் அடியார்களை ஈர்த்த காட்சிக் கூடம்

இலங்கையின் வடபுலத்திலே, வரண்ட காலங்கள் நீண்டு, மழைக்காலங்கள் ஒடுங்கிச் செல்வதை நாம் அவதானிக்கத் தொடங்கியிருக்கிறோம். அவற்றுடன் சேர்ந்து நீர்ப் பற்றாக்குறை என்பது பலவித கோணங்களிலே எம்மை மெல்ல மெல்ல நெருக்கத் தொடங்கியிருக்கிறது. நிலத்தடி நீரையே மிகப் பிரதானமான நீராதாரமாகக் கொண்டிருந்த எங்கள் வாழ்வின் இருப்பு மெல்ல மெல்ல கேள்விக்குறியாகிக் கொண்டிருக்கிறது.

ஓரிரு தசாப்தங்களுக்கு முந்திய காலம் வரை எங்கள் வாழ்வை வளப்படுத்திய கிணறுகளும் வயல்களும் தோட்டங்களும் புற்றரைகளும் மெல்ல மெல்ல காணாமலாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. குழாய்க் கிணறுகளின் அதிகரிப்பும் நிலத்தடி நீரின் மிகையான பாவனையும், அதன் மாசும் சேர்ந்து எம் பிராந்தியத்தின் நீர்ப்பாதுகாப்பையும் நீர் இறைமையும் பெரும் அச்சுறுத்தலுக்காளாக்கியிருக்கின்றன. இவற்றை அறிந்தும் சமூகத்துடன் பகிர்வதற்கு ஏதுவான வாய்ப்புகளைத் தேடிக்கொண்டிருந்த எங்கள் குழுமத்திற்கு நல்லூர்க் கந்தனின் அலங்காரத் திருவிழா ஏற்பாடுகளின் அறிவிப்பு ஓர் ஒளிவிளக்காய்த் தெரிந்தது

நல்லூரை நாடிவரும் அடியார்களைத் தேடி, நிலத்தடி நீர் தொடர்பிலே வட மாகாணம் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக, சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலே மிகவும் புத்தாக்கமிகு வழிகளிலே விழிப்புணர்வைப் பரப்பும் நோக்கில் ' நிலத்தடி நீர் எங்கள் உயிர் நாடி' என்ற கண்காட்சிக் கூடத்தை அமைத்தோம்.

திருவிழாவோடு சேர்ந்து கடைசி பத்து நாட்களும் எங்கள் கண்காட்சிக் கூடமும் களை கட்டியது. வயது வேறுபாடின்றி அலை மோதிய அடியார்கள் நிலத்தடி நீர் எப்படியிருக்கும் என்பது தொட்டு அதனைப் பாதுகாப்பதில் தங்கள் வகிபாகம் வரை பல விடயங்களை அறிந்து கொள்வதற்கு எங்கள் கூடம் களம் அமைத்துக் கொடுத்தது.

கவர்ச்சிகரமான விழிப்புணர்வுப் பதாகைகளாகட்டும், நிலத்தடி நீரின் இயக்கவியலை விளக்கும் முப்பரிமாண உரு மாதிரிகளாகட்டும், 'யாழ்ப்பாணத்துக் கோர் ஆறு' திட்டத்தின் முப்பரிமாண மாதிரியாகட்டும், வயது வேறுபாடின்றி அனைவரையும் ஈர்த்த வினாடி வினாப்போட்டியும் வெற்றியாளர்கள் பெற்றுக்கொண்ட பரிசுகளுமாகட்டும்... சளைக்காமல் விவரித்த அலுவலர்கள், தன்னார்வலர்களின் பெரு முயற்சியாகட்டும் அவை யாவுமே கூடத்தை நாடி வந்தவர்களை பத்து நிமிடங்களேனும் தரித்து நின்று செவிமடுக்கச் செய்ததோடல்லாமல் கண்டும் காணாமல் கடந்து சென்றவர்களையும் உள்ளே வந்து எட்டிப்பார்க்க வைத்தன.

வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களம், நீர்வளச்சபை, வவுனியா பல்கலைக்கழகம் மற்றும் யாழ். மாநகரசபையின் கூட்டிணைவுடன் ஆரம்பிக்கப்பட்ட இந் நிகழ்வினை விருந்தினர் முன்னிலையில், வட மாகாணத்தின் பிரதம செயலாளர் இ. இளங்கோவன் ஆரம்பித்து வைத்தார்.



தாங்கள் தினந்தோறும் அனுபவிக்கும் நீர் நெருக்கடிக்குத் தீர்வு கிடைக்குமா எனத் தேடி வந்தோரும் நீர்வள உரையாடல்களை நாடி வந்தோரும், நேற்றுக் கிடைக்காத பரிசு இன்றேனும் கிடைத்துவிட வேண்டுமென ஓடோடி வந்த சிறார்களும், எங்கள் பாடசாலையிலும் வந்து இதைச் செய்யுங்களேன் என்று அழைப்பு விடுத்த ஆசிரியர்களுமென ஆர்வமுள்ள அடியார்கள் எங்கள் கூடத்தை நோக்கிப் படையெடுத்தமை எங்களுக்குக் கிடைத்த பெரு வெற்றி எனலாம். அத்துடன் தன்னார்வலர்களின் உற்சாகம், எம் முயற்சியிலே சமூகத்தை இணைக்கவேண்டிய தேவையை வெளிப்படுத்தியது. சாதாரண விழிப்புணர்வையும் தாண்டி, சமூகத்தை ஒன்றிணைத்து எங்கள் நீர்வளத்தைப் பாதுகாக்கக் கரம் கோர்க்க முன் வந்த ஓர் இயக்கத்தின் வெளிப்பாடாகவே இந்த முயற்சி எங்களுக்குத் தெரிந்தது.



12 பதாகைகள்
04 மாதிரியுருக்கள்
02 கலந்துரையாடல்கள்
146 தன்னார்வலர் மணித்தியாலங்கள்
31 தன்னார்வலர்கள்
05 அனுசரணையாளர்கள்



1000 பார்வையாளர்கள்
220 வெற்றியாளர்கள்

100% மேம்பட்ட அறிவுடன் வீடு திரும்பினர்; கண்காட்சி விளைதிறன் மிக்கது என்றனர்

75% நிலத்தடி நீரைப் பேண உறுதி பூண்டனர்!



## எங்கள் முயற்சியின் பெரு வெற்றி!

**அழைப்பு:** இளம் நீர் வாண்மையாளர்களுடன் இணைந்து உரையாட வாருங்கள்

**தலைப்பு:**
நீர்ப்பரப்புரைகள்: அனுபவமும் அடுத்த படிகளும்

**திகதி:** 26.09.2024
**நேரம்:** பி.ப. 7.30

அடையாளம்: 988 210 5064
கடவுச்சொல்: abc.1234

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதி துளியின் 8 ஆவது இதழ் உங்கள் கைகளை நாடி வரும். வடமாகாணத்து நீர் வளம் சார்ந்து உங்கள் கருத்துகளையும் கேள்விகளையும் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி: Water Security through Participatory Action Research (WASPAR) Project, Centre for Digital Epidemiology, Faculty of Medicine, University of Jaffna; மின்னஞ்சல்: water@univ.jfn.ac.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய வெளிவிவகார அமைச்சின் முழுமையான அனுசரணையுடன் ஐரெக் திட்டத்தில் ஹைதராபாத்தில் உள்ள தெலுங்கான அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும் டொக்டர் எம்.சி.ஆர். எச்.ஆர்.டி. நிறுவனத்தில் இலங்கை ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்களுக்கான ஊடக முகாமைத்துவம் தொடர்பான இருவார காலப் பயிற்சி 24.06.2024 தொடக்கம் 07.07.2024 வரை இடம்பெற்றது. இந்தப் பயிற்சியில் இலங்கையிலிருந்து 29பேர் பங்குபற்றினோம். அது தொடர்பான தனது அனுபவங்களை உதயன் சஞ்சீவி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார் கட்டுரையாளர்.

# 3 அயல் தேசத்தில் சில நாள்கள்...

O டிலீப் அமுதன்

### இரண்டாம் நாள்

மறுநாள் காலை 5.30 மணிக்கு எழுந்து அறையில் தேநீர் தயாரிப்பதற்கு வழங்கப்பட்டவற்றை பயன்படுத்தி ஏதோ என்னால் முடிந்த தேநீரை தயாரித்து நானே அருந்திவிட்டு காலை 6.15 மணிக்கு யோகா பயிற்சிக்குரிய இடத்துக்குச் சென்றேன். எல்லோரும் நேரத்துடனேயே வந்தார்கள்.




ஹைதராபாத்தின் தரைத்தோற்றத்தை இந்த இடத்தில் விவரிப்பது பொருத்தமாக இருக்கும். ஏனெனில் யோகா பயிற்சிக்குரிய இடம் திறந்தவெளி. அந்த இடத்திலிருந்து சூரியன் முத்தம் கொடுக்கும் காலை அழகை ரசிக்க முடியும்.

ஹைதராபாத் உள்ளகச் சமவெளிக்குரிய இடம். (இலங்கையின் தரைத்தோற்றத்தை நாம் கரையோரச் சமவெளி, உள்ளகச் சமவெளி, மத்திய மலைநாடு என்று பிரிப்போம். அதில் உள்ளகச் சமவெளியில் மலைக் குன்றுகள் இடையிடையே காணப்படும். அதையொத்த பிரதேசமே ஹைதராபாத்) அதனால் காலையில் யோகாப் பயிற்சிக்கான சுற்றுச்சூழலும் சிறப்பாக இருந்தது. யோகாப் பயிற்சியை கிருஸ்ண பிரசாத் வழங்கினார்.

வந்திருந்தவர்களுக்கும் யோகாவுக்கும் சம்பந்தமில்லாததைப் புரிந்துகொண்டு எங்களுக்கு செய்யக் கூடிய தேவையான பயிற்சிகளையே படிப்படியாக வழங்கினார். தினமும் நான் யோகாவுக்குச் சென்றேன். ஆனால் நாள்கள் செல்லச் செல்ல கழுதை தேய்ந்து கட்டெறும்பானதைப் போன்று எங்கள் நண்பர்கள் 'கட்' அடிக்கத் தொடங்கினார்கள். இறுதி நாளில் வெறும் 6 பேர் மாத்திரம்தான். ஆனாலும் கிருஸ்ண பிரசாத் தனது இலகுவான பயிற்சி நெறிகளை எங்களுக்குச் சொல்லித்தராமல் விட்டதில்லை. நாம் மீண்டும் இலங்கைக்குத் திரும்பி வீட்டில் செய்யக் கூடிய பயிற்சிகளைக் கூட பொறுமையாகச் சொல்லித் தந்தார். உடம்பை ஆட்டி, அசைப்பதன் அவசியத்தையும், ஜிம்முக்கும் யோகாவுக்கும் இடையிலான வித்தியாசங்களைக்கூட சொல்லித்தந்தார். யோகா முடித்த பின்னர் நாங்கள் 4 தமிழ் நண்பர்களும் எங்களது அறைகளுக்குச் சென்று குளித்துவிட்டு பின்னர்தான் காலை உணவுக்குச் செல்வோம். ஆனால் பெரும்பாலான சகோதர மொழி பேசும் நண்பர்கள் யோகா முடிந்ததும் அப்படியே காலை உணவு அருந்தச் செல்வார்கள்.

காலை உணவாக தோசை, இட்லி, உப்புமா, ஊத்தப்பம் என்று வகை வகையான உணவுகள் ஒவ்வொரு நாளும் கிடைத்தன. விரும்பியதை எடுத்து நாம் தட்டில் போட்டுக் கொண்டு ஆற அமர இருந்து உணவு அருந்துவோம்.

முதல் நாள் எங்களுக்கான ஆரம்ப நிகழ்வு நிறுவனத்தினுள்ளே உள்ள அக்சரா ஹோலில் நடந்தது. பிரதம விருந்தினராக நிறுவனத்தின் இயக்குநரும் தெலுங்கானாவின் சிறப்பு பிரதம செயலருமான கலாநிதி சாக்சங் கோய்ல் பங்கேற்றார். அவர் இந்திய நிர்வாக சேவையைச் சேர்ந்த மூத்த அதிகாரி. ஆரம்ப நிகழ்வைத் தொடர்ந்து குழு ஒளிப்படம் எடுத்தோம். அதன் பின்னர் எங்களுக்கான பயிற்சிகள் ஆரம்பமாகின. ஊடகங்கள் ஊடான திட்டமிட்ட பரப்புரைகள் எப்படி முன்னெடுக்கப்படுகின்றன, பெரு நிறுவனங்கள் அதை எப்படிச் செய்கின்றார்கள் என்பது உள்ளிட்ட பல்வேறு விடயங்களை பேராசிரியர் பி.சானி முன்னெடுத்தார்.

முதல்நாள் இரவு கலாசார நிகழ்வும் அதன் பின்னரான இரவு உணவு விருந்துபசாரமும் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. சகோதர மொழி நண்பர்கள் பலர் சாரத்துடன் (புத்தாண்டுக்கு அவர்கள் பெரும்பாலும் இவ்வாறு ஆடை அணிவதைக் கண்டிருக்கின்றேன்) வந்தார்கள். நான் வேட்டியுடன் சென்றேன்.

பரதநாட்டியத்துடன் நிகழ்வு ஆரம்பமானது. குச்சிப்பிடி நடனம் அத்துடன் தெலுங்கு தேசம் தனி தேசமாகிய பின்னர் அந்த நாட்டு அரசால் ஊக்குவிக்கப்படும் தெலுங்கானாவுக்குரிய வாரியர் நடனமும் அரங்கேற்றப்பட்டது. இறுதியில் இலங்கையிலிருந்து சென்றவர்களுக்கு ஆச்சரியமளிப்பதற்காக பரத நாட்டியத்தில் 'மெனிகே மஹே கித்தே' என்ற யொகானியின் பாட்டும் அதைத் தொடர்ந்து 'நறுமுகையே நறுமுகையே' என்ற தமிழ் பாட்டுக்கும் பரதம் ஆடினார்கள்.

அதன் பின்னர் இரவு விருந்துபசாரத்தை இயக்குநர் சாக்சங் கோய்ல் வழங்கினார். 'ஒரிஜினல் ஹைதராபாத் மட்டன் புரியாணி' விருந்து. சிறப்பாக இருந்தது. விருந்து முடிந்து வரும்போது, எங்களுக்கு கலாசார நடனங்களை வழங்கிய மாணவிகளின் கலைக் கல்லூரியின் இயக்குநர் பிருத்திவிராஜ்ஜை சந்திக்க நேர்ந்தது. நான் வேட்டியுடன் இருப்பதைப்பார்த்து இது தமிழ் நாட்டின் கலாசாரம் என ஆங்கிலத்தில் கூறினார். நான், தமிழன் என்று ஆங்கிலத்தில் பதிலளிக்க, அவர் தானும் தமிழ் நாட்டைச் சேர்ந்தவன் என்று தமிழில் பதில் சொன்னார். பின்னர் நாங்கள் தமிழர்கள் நான்கு பேரும் அவருடன் தனியாக சுமார் அரை மணி நேரம் உரையாடினோம். 20 ஆண்டுகளுக்கு முன்னர் தெலுங்கானாவுக்கு வந்ததாகவும், தனது தாய் மொழி தமிழ் என்றும் குறிப்பிட்டார். சகோதர மொழி நண்பர் மட்டன் புரியாணியும், தயிரும் எடுத்து உணவருந்திவிட்டு மறுநாள் காலையில் முளைப்பயிறையும் சாப்பிட்டுவிட்டு இரண்டு நாள்கள் காய்ச்சலில் அவஸ்தைப்பட்டார் என்பது வேறு கதை. இரண்டாம் நாள் இரவு 10 மணிக்கே எல்லோரும் அறைக்குச் சென்று தூங்கினோம்.



(பயணம் தொடரும்)



# ஊர்ப்புதினம்

பாகம் 2

O இராகவன்

58

பெரியாம்பியண்ணயின்ர தேப்பன் செல்லையாப்பு மதவாச்சியில அந்தக்காலத்தில பெரிய கடை வைச்சிருந்தவராம். பெரியாம்பியண்ணையும் சின்னனிலயிருந்து அங்கைதானிருந்தவர். படிச்சது கிடிச்சதெல்லாம் அங்கதான். அவர் அங்க பள்ளிக்கூடத்தில படிக்கேக்குள்ள சிங்களத்திலயொரு பேச்சுப் போட்டி வைச்சவையாம்.

அவரையும் அந்தப் பேச்சுப் போட்டியில பங்குபற்றத் தெரிவுசெய்துபோட்டினமாம். அவர் பக்கத்திலயிருந்த விகாரைக்குப் போய் அதுக்குப் பொறுப்பாயிருந்த பிக்குவைச் சந்திச்சு விசயத்தைச் சொல்லி சிங்களத்தில ஒரு பேச்சை எழுதுவிச்சு அந்தப் பிக்குவிட்டயே ஒரு கிழமையாப் பயிற்சிஎடுத்தும் போட்டியில கலந்துகொண்டு பேசினவராம். அவருக்குத் தான் அந்தப் போட்டியில முதலாமிடம் கிடைச்சுத் தங்கப் பதக்கம் குடுத்தவை யாம். 'நம்மட சிங்களப் பையன்கள்கூட இப்பிடி நல்ல உச்சரிப்போட தடங்கலில்லாமல் சரளமாகப் பேசமாட்டாங்கள்' எண்டு அந்தப் பிக்குவும் பாராட்டினவராம். அதால பெரியாம்பியண்ணைக்குச் சிங்களமும் தண்ணிபட்டபாடு.

பிறகு பெரியாம்பியண்ணையின்ரை தேப்பன் ஊருக்குவந்து கடையைப் போட்டு நடத்தினார். அவருக்குப்பிறகு பெரியாம்பியண்ணை அதை நடத்தினார். நான் சின்னப் பொடியனாயிருக்கேக்குள்ள ஊராக்களெல்லாம் அந்தக்கடையைச் செல்லப்பா கடை எண்டுதான் சொல்லுறவை. அவர் ஊரில கடை நடத்தினாலும் அடிக்கடி மதவாச்சிக்குப் போய்வருவார். அப்பிடிப்போய் வரேக்குள்ள தனக்குக் கடையில உதவியாய் நிக்கட்டுமெண்டுதான் ஷாலுடீன் எண்ட முஸ்லிம் பொடியனை ஒருநாள் கூட்டிக்கொண்டு வந்தார். ஷாலுடீன் நல்ல வசீகரமான சிவலைப்பொடியன். சிவப்பு கோடன் சாறமும் சாம்பல்கலர் சேர்ட்டும் போட்டிருப்பான். என்னைவிட அஞ்சாறு வயது மூப்பு. அவன் காலமை புத்தகங்கொப்பியளத் தோளில வைச்சுக்கொண்டு யாக்கருப் பள்ளிகூடத்துக்குப் போவான். பின்நேரம். பள்ளிக்கூடம் முடிய வந்து கடையில நிப்பான். எப்ப பாத்தாலும் குளிச்சுக் கிளிச்சு நீற்றாத்தான் திரிவான். எங்கட மூத்தண்ணா, இளையண்ணா இரண்டுபேரோடயும் ஷாலுடீன் வலு ஒட்டு. நாங்கள் எல்லாம் சேந்து அவனோட கிட்டிப்புள்ளு விளையாடியிருக்கிறம். போளை அடிச்சிருக்கிறம், கொஞ்சநாட்கழிச்சுச் ஷாலுடீனின்ர தம்பி நிசாரும் பெரியாம்பியண்ணையின்ர கடைக்கு வந்திட்டான். அவனுக்கு ஷாலுடீனை விட இரண்டொருவயது குறைவாயிருக்கும். அவனும் ஷாலுடீனைப் போல நல்ல சிவலை. யாக்கருப் பள்ளிக்கூடத்தில தான் அவனும் படிச்சவன்.

ஒருவரியம் மட்டில அவங்கள் பெரியாம்பியண்ணையின்ர கடையில நிண்டிருப்பாங்கள் எண்டு நினைக்கிறன். பிறகு ஷாலுடீன் என்னசெய்தானோதெரியேல்ல. அவன்ர பழக்கவழக்கங்கள் சரியில்லையெண்டு பெரியாம்பியண்ணை தாய்தேப்பனைக் கூப்பிட்டு 'உங்கட மகனைக் கூட்டிக்கொண்டு போங்கோ' எண்டு சொன்னது எனக்கு நேற்று நடந்ததைப்போலையிருக்கு. ஷாலுடீன் ஊரைவிட்டுப் போகேக்குள்ள விக்கிவிக்கியழுதுகொண்டுதான் போனவன். அதைப்பாத்து எனக்கும் அழுகை வந்திட்டுது. கொஞ்சநாள் நாங்கள் அவனைப்பற்றியே கதைச்சுக் கொண்டிருந்தம். பிறகு மெல்ல மெல்ல மறந்திட்டம். அவன் இப்பிடியொரு கெற்றப்பில வந்து நிப்பான் எண்டு ஆருக்குத் தெரியும் ?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளில் தமிழறிஞர்:

## க. உமாமகேசுவரம்பிள்ளை
## (05.05.1934 - 20.04.2024)

10

○ பா.துவாரகன்

## துர்க்கா தேவியின் பதமடைந்த சாவித்திரி தேவியும் கதிர்காமத்துக்குப் போகாமலே மறைந்த பிறேமாவதியும்

பண்டிதர் உமாமகேசுவரன் இறுதிக்காலத்தில் சில ஆண்டுகள் நடமாட முடியாத நிலையிலிருந்தார். அஸ்வினி, லதா ஆகியோரது உதவியுடன் தன்னைப் பராமரித்த மனையாளை நன்றிப் பெருக்கோடு நினைவு கூர்வார் உமாமகேசுவரன். கணவன் என்ன தான் சிறு குழந்தை போல் அடம் பிடித்தாலும் எப்போதும் கனிவோடு இருக்கும் சாவித்திரி ஆசிரியையின் பொறுமை வியப்பை ஏற்படுத்தும். சாவித்திரி ஆசிரியை இல்லாவிட்டால் சிறியேன் உமாமகேசுவரன் ஆசிரியர் அவர்களிடம் கற்கும் பேற்றை பலவருடங்களுக்கு முன்னரே இழந்திருப்பேன்.

உமாமகேசுரனைப் பார்க்க நீண்ட நாள்கள் நான் போகாவிட்டால் அல்லது கணவன் கவலையோடு இருந்தால் சாவித்திரி ஆசிரியை தொலைபேசி அழைப்பெடுத்து நீங்கள் வந்து அவரோடு கதைத்தால் மகிழ்ச்சியாக இருப்பார் என்று என்னைக் கூப்பிடுவார். இவ்வாறு சென்று நான் உமாமகேசுவரன் ஆசிரியரிடம் கற்றுக்கொண்ட விடயங்கள் அநேகம்.

அச்சது பொடிசெய்த அதிதீரனாகிய விநாயகப் பெருமானே தனது இஷ்ட தெய்வம் என்று கூறும் உமாமகேசுவரன் 2024.04.20 அன்று இவ்வுலக வாழ்வை நீத்தார். சாவித்திரி ஆசிரியை அவர்கள் உமாமகேசுவரன் என்ற சத்தியவானின் நினைவாகவே வாழ்ந்தார். தனது பெயருக்குப் பின்னால் தேவி என்ற பதம் வருவதை திருமதி உமாமகேசுவரன் விரும்புவதில்லை. இதனால் தனது பெயரை எப்போதும் திருமதி சாவித்திரி உமாமகேசுவரன் என்றே எழுதுவார்.

சாவித்திரி ஆசிரியை கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு அருகே கோயில் கொண்டிருந்த முருகனிடத்தில் தனது இல்வாழ்க்கை குறித்து விண்ணப்பித்திருந்ததையும் நினைவு கூர்வார். உமாமகேசுவரன் ஆறு வருடங்கள் கந்தசஷ்டி விரதமிருந்தே தன்னைக் கரம் பற்றியதாகச் சொன்னார். உமாமகேசுவரன் விரத காலத்தில் 6 நாள்களும் தண்ணீர் அருந்த மாட்டார். இவர்களது திருமணம் 1969 இல் ஆவணிச் சதுர்த்தி அன்று நிகழ்ந்தது.

திருமணத்துக்குப் பின்னர் கந்தசஷ்டி விரதம் பிடிக்க அப்பா கதிரிப்பிள்ளை பண்டிதர் உமாவை அனுமதிக்கவில்லை. "உன்னோடு சேர்ந்து அவளும் பட்டினி கிடப்பாள்" என்று கூறி உமாவின் விரதத்தை நிறுத்தி விட்டாராம்.

திருமதி சாவித்திரி உமாமகேசுவரன் அவர்கள் கணவனுக்கு நோய்வந்தாலோ அல்லது அயலவர்கள், உறவினர்கள் எவரும் நோயுற்றாலோ அன்றி வேறு கஷ்ட துன்பங்களை அனுபவித்தாலோ, தெல்லிப்பழை துர்க்கை அம்மனுக்கு நேர்த்திகள் வைத்து அர்ச்சனைகள் செய்விப்பார். கொழும்பிலே வாழ்ந்த காலத்திலும் தெல்லிநகர்த் துர்க்கா தேவியிடம் சாவித்திரிதேவியின் விண்ணப்பங்களுக்கு குறைவிருக்காது. துர்க்காதேவி விண்ணப்பங்களை ஏற்று அருள்மழை பொழிந்தார். சாவித்திரி தேவி நல்லூர்க் கந்தனிடமும் விண்ணப்பங்களை வைத்து எல்லையில்லா அருள் பெற்றிருக்கிறார்.


யாழ். இந்து மகளிர் கல்லூரியின் புகழ்பூத்த மாணவிகளில் (1950-1958) ஒருவராகத் திகழ்ந்த சாவித்திரி வீட்டிலிருந்தே சம்ஸ்கிருதம், தமிழ், தூயகணிதம் ஆகிய பாடங்களைக் கற்று பேராதனைப் பல்கலைக்கழகக் கலைமாணிப் பட்டதாரியானார். யாழ். இந்து மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, திருக்குடும்பக் கன்னியர் மடம் முதலான பாடசாலைகளில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

ஓய்வு பெற்ற பின்னர் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் மொழிபெயர்ப்பாளராகவும் கடமையாற்றினார். கொழும்பிலே அரசியல் பிரமுகர்கள் சிலரது பிள்ளைகள் சாவித்திரி ஆசிரியையின் வீட்டுக்கு வந்து அவரிடம் கற்றனர்.

சாவித்திரி அவர்கள் தினமும் தவறாது ஆங்கிலத்தில் நாட்குறிப்பு எழுதுவார். ஏறத்தாழ 10 டயரிகள் அவரிடம் இருந்தன. இந்நாட்குறிப்புகளில் உமாமகேசுவரன் அவர்களது 'ஒரு நாள் வாழ்வு' எவ்வாறு கழிந்தது என்ற தகவலுடன், அஸ்வினியும் லதாவும் தாதியர்கள் போல அன்பாக உமாமகேசுவரன் அவர்களைப் பராமரித்ததைப் பாடல்களாக்கியிருப்பார். அஸ்வினி, லதா முதலானவர்களுக்கான பிரார்த்தனைப் பாடல்களாகவும் இவரது டயரிக் குறிப்புகள் இருக்கும். மேலும் காலிமுகத்திடல் அரகலய பேராட்டம் முதலான நாட்டு நடப்புகளும் இருக்கும்.

### அன்று திருமஞ்சத்தில் வலம்வந்த தெல்லிநகர்த் துர்க்கா!

தெல்லிப்பழை துர்க்காதேவிக்கு 2024 ஆவணி திருவோண நட்சத்திரத்தைப் பட்சமாகக் கொண்ட வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகி நடைபெறும் தவக்காலப் பொழுது.




வேதங்களின் நறுமணமாக வீற்றிருப்பவளும், அழகுக்கு நிகரில்லாதவளும் நாலெண்வகை அறங்களை வளர்க்கும் செல்வியாகவும் விளங்கும் தெல்லிநகர்த் துர்க்காவுக்கு 2024.09.09 அன்று ஆறாம் நாள் உற்சவம். துர்க்கா தேவியின் திருவதனத்திலே குங்கும வருண ரோஜாமலர்களின் பட்டொளி பட்டொளிர, தெல்லிநகர்த் துர்க்கா அன்று அழகிய மஞ்சத்திலே வலம் வந்தாள். அர்த்தசாமப் பூசையும் நிறைவுற்றது. அஸ்வினியிடமிருந்து தொலைபேசி அழைப்பு. "சாவித்திரி தேவி துர்க்கா தேவியின் பதம் பற்றினள்!"

### வனத்தின் அழைப்பு1

கதிர்காம யாத்திரை என்பதை முருகனது அழைப்பு என்பார்கள். அகத்திய முனிவர் உகந்தையிலே முருகனைத் தரிசித்து அங்கிருந்து வனங்களூடாக நடந்த பாதை வழியே நடந்து, கதிரைமலைக்குச் சென்று கந்தனைத் தரிசிப்பர். எனக்கு இது இரண்டாவது யாத்திரை. நாம் 11 பேர் ஒன்றாகச் சென்றோம்.

யாத்திரையில் குமண, யால, கட்டகாமம் ஆகிய 3 வனங்களைக் கடந்து செல்லவேண்டும். இதிலே யால என்ற காட்டைத் தொலையாக் காடு என்பார்கள். அந்தக்காடு போய்க் கொண்டேயிருக்கும். அவ்வாறே யாத்திரையிலே தொலையாப் புலம் என்று ஓரிடம் வரும். அது பாலைவனம் போல் இருக்கும். எப்போது இந்த வெளியைக் கடந்து முடிப்போம் என்றிருக்கும். அதுவும் முடிவற்று நீளும்.

எம்மை அழைத்துச் சென்ற அழகன் எல்லோருக்கும் முன்னே சென்று கொண்டிருந்தான். எமது பயணம் ஆரம்பித்து 3ஆம் நாள். நான் எல்லோரையும் விட பின்னாலே நடந்து போய்க்கொண்டிருந்தேன். ஓய்வெடுக்காது அழகன் முன்னே போய்க் கொண்டிருப்பான் என்று கருதி எமது குழுவைச் சேர்ந்த சிலரைக் கடந்து முன்னேறிக் கொண்டிருந்தேன். வெளியின் முடிவில் வரும் காட்டினுள் மாலை 4.00 மணிக்குப் பிறகு இராணுத்தினர் அனுமதிக்கமாட்டார்கள். அது யானைகள் வரும் காடு. அந்த நாளில் கடைசியாகப் போன சில யாத்திரிகர்களுடன் அந்தக் காட்டினுள் காலடி எடுத்து வைத்தேன். அப்போது வனம் என்னை அழைத்துச் சென்றதை நான் அறியவில்லை. அழகனும் என்னோடு வந்தவர்களும் இன்று அந்த வனத்துக்குள் வரமாட்டார்கள் என்பதையோ அவர்களைப் பிரிந்து விட்டேன் என்பதையோ என்னைத் தேடி பரதனும் நண்பர்களும் புறப்படுவார்கள் என்றோ அறியவில்லை. அன்று இரவு உணவருந்தும் போது தங்களுடன் வந்த துவாரகன் இல்லையே என்ற மிகுந்த துக்கம் அவர்களுக்கு ஏற்பட்டது. நாம் மீண்டும் இணைந்து கொண்டது கதிர்காமத்தில்.

### மக்காவுக்குப் போகாது மோட்சம் அடைந்தவர்கள்!

கட்டகாமம் என்ற இடத்தில் வனபரிபாலன திணைக்களத்து டன் இணைந்த இராணுவ முகாம் கதிர்காம யாத்திரையிலே முக்கியமான ஓர் தரிப்பிடம். அங்கிருந்து பி.ப. 4.00 மணிக்குப் பின்னர் கட்டகாமம் காட்டைக் கடந்து செல்ல அனுமதிக்கமாட்டார்கள். வழியிலே அறிமுகமான மட்டக்களப்பைச் சேர்ந்த இளைஞனும் முதியவர் ஒருவரும் என்னிடம் வந்து, அப்பம் சுட்டு விற்று கதிர்காமம் போகாமலே இறந்து போன கட்டகாமத்து ஆச்சியின் சமாதி காட்டிலே இருப்பதாகவும் அதனைப் பார்க்கப் போவதாகவும் சொன்னார்கள். நானும் அவர்களோடு புறப்படுகின்றேன். சமாதி எங்கிருக்கிறது என்று எவருக்குமே தெரியாது. கொஞ்சத் தூரம் போனதும் ஓர் இராணுவ வீரனது உதவியுடன் பிறேமாவதியின் சமாதி உள்ள இடத்தை அறிந்து கொண்டோம். பாதை என்று எதுவும் இல்லை. மரங்களுக்கூடாக குனிந்தும் வளைந்தும் செல்ல வேண்டும். அங்கு 4 பேருடைய சமாதிகள் இருந்தன. அந்த இடம் அழகாக இருந்தது. கற்பூரமும் வத்திக் குச்சியும் ஏற்றி வழிபட்டோம்.

இது பிறேமாவதி என்ற கட்டகாமத்து ஆயிழை ஒருத்தியின் கதை. இது நிகழ்ந்து 50 வருடங்கள் இருக்கலாம். யாத்திரிகர்களுக்கு அப்பம் சுட்டு வழங்குவது கட்டகாமத்து ஆச்சியின் வழிபாடு. அப்பம் சுட்டு முடிந்த பிறகு யாத்திரைக்குப் புறப்பட எண்ணியிருந்தாள். யாத்திரிகர்கள் வந்த வண்ணமே இருந்தனர். பசியோடு களைத்து வந்தவர்களுக்கு அப்பம் வழங்கிக் கொண்டிருந்தாள். அவளால் கதிர்காமத்துக்குச் சென்று தனது வேண்டுதலை நிறைவேற்றமுடியவில்லை என்ற ஏக்கம். இறக்கு முன்னர் கதிர்காமத்து ஐயனின் தரிசனம்.

அப்பம் சுட்டு விற்று கதிர்காமத்துக்குப் போகாமலே இறந்து போன கட்டகாமத்து ஆயிழையின் கதையைக் கேட்ட போது இரசவாதி என்ற நாவல் நினைவுக்கு வந்தது. மக்காவுக்கு யாத்திரை செல்வோருக்கு பாலைவனத்திலே தேநீர் விற்கும் ஒருவனது ஏக்கம் இவ்வாறிருந்தது:

மக்காவுக்குப் போனால் நான் எந்தத் திசை நோக்கி விழுந்து வணங்குவேன். யார் யாருக்காகாகப் பிரார்த்தனைகள் செய்வேன் என்று எண்ணியவாறே மக்கா யாத்திரிகர்களுக்கு அன்போடு தேநீர் வழங்குவான். அவனால் மக்காவுக்குப் போக முடியவில்லை.

1. வனத்தின் அழைப்பு அஸ்வகோஸ் எழுதிய கவிதை நூல்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரூபிக்கப்படாத 7 வழக்குகள்



கே.வி.தவராசா

2008.02.03 ஆம் திகதி .

பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் இரகசியப் பொலிஸாரினால் யாழ்ப்பாணம், மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட ரமேஷ் என அழைக்கப்படும் ஜெயராம் இராமநாதன் கைதுசெய்யப்பட்டார். இவருக்கு எதிராக 2010 ஆம் ஆண்டு ஏழு குற்றச்சாட்டுப் பத்திரங்கள் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

**கொழும்பு மேல் நீதிமன்றில் நான்கு வழக்குகள்**

கொழும்பிலிருந்து கட்டுநாயக்கவுக்குச் செல்லும் புகையிரதத்தை வெடிகுண்டு வைத்து தகர்க்க சதித்திட்டம் தீட்டியதாகவும், இராணுவத்தின் உயர் அதிகாரியின் நடவடிக்கைகளை வேவு பார்த்து புலிகளின் தலைமையகத்துக்கு தகவல் வழங்கியதாகவும், கடும் சேதம் விளைவிக்கக் கூடிய குண்டுகளை உடைமையில் வைத்திருந்ததாகவும், வத்தளை எலகந்தையில் அமைந்துள்ள மின்சார நிலையத்தைக் குண்டு வைத்துத் தகர்த்தெறியச் சதித் திட்டம் தீட்டியதாகவும் மொத்தமாக 4 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு தனித்தனியாக நான்கு வழக்குகள் சட்டமா அதிபரினால் கொழும்பு விசேட மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன.

மின்சார நிலையத்தைக் குண்டு வைத்துத் தகர்த்தெறியச் சதி, இராணுவ உயரதிகாரியை வேவு பார்த்தமை, மூன்று குண்டுகளை உடைமையில் வைத்திருந்தமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு தனித்தனியாக மூன்று குற்றச்சாட்டுப் பத்திரங்கள் நீர்கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன.

2011இல் இந்த வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தைப் பதிவிட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை மொழி பெயர்த்த பொலிஸ் சார்ஜன்ட், தட்டெழுத்தாளர், சட்ட மருத்துவ அதிகாரி ஆகியோரது சாட்சியங்களை அரச சட்டத்தரணி நெறிப்படுத்தினார். எதிராளி கைக்குண்டுகளை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டை நிரூபிக்க எதிராளியை கைது செய்த பொலிஸ் பரிசோதகர் மற்றும் எதிராளியின் சாட்சியங்கள் என்பன நிறைவடைந்ததையடுத்து இரு தரப்பினதும் எழுத்து மூலமான சமர்ப்பணம் நீதிமன்றில் முன்வைக்கப்பட்டது.

1. குற்றஒப்புதல் வாக்குமூலம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் முன்னிலையில் பதிவுசெய்யப்படவில்லை. எதிராளியைச் சித்திரவதை செய்து பெறப்பட்ட குற்றஒப்புதல் வாக்குமூலத்தில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கையெழுத்திட்டுள்ளார் என்பதனையும் குறுக்கு விசாரணையில் எதிராளி தரப்பால் நிரூபிக்கப்பட்டது.
2. எதிராளியின் உடலில் ஒன்பது காயங்கள் ஏற்பட்டுள்ளன. அவை தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்ட காலத்தில் பொலிஸாரினால் புரியப்பட்ட சித்திரவதை மூலம் ஏற்படுத்தப்பட்ட காயங்களென்பதை அரச தரப்புச் சாட்சியான சட்ட மருத்துவ அதிகாரியின் சாட்சியத்தை நான் குறுக்கு விசாரணை செய்தபோது உறுதிப்படுத்தப்பட்டது. இதனால் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் எதிராளியினால் சுயமாக வழங்கப்படவில்லையென நீதிமன்றம் கட்டளை வழங்கியது.

**பிரதான விசாரணை**

(1) குற்ற ஒப்புதல் வாக்குமூலம் உண்மை விளம்பல் விசாரணையில் எதிராளியினால் சுயமாக வழங்கப்படவில்லையென நீதிமன்றம் கட்டளை வழங்கியமை

(2) கொழும்பிலிருந்து கட்டுநாயக்க செல்லும் புகையிரதத்துக்கு வெடிகுண்டு வைத்து தகர்க்க எதிராளி ஆயத்தம் செய்கையில் எதிராளியின் உடைமையிலிருந்து கைப்பற்றப்பட்டதாக அரச தரப்பால் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட சான்றுப் பொருட்களான வெடிகுண்டுகள் எதிராளியின் தனி உடைமையிலிருந்து கைப்பற்றப்பட்டன என்பதனை அரச தரப்பு நிரூபிக்கவில்லை என்பதுடன் அரச தரப்புச் சாட்சியங்களின் முரண்பாடு கள் ஊடாக நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

(3) அரச தரப்பினால் முன்வைக்கப்பட்ட அரச தரப்பு சாட்சியாளர்களில் சட்ட மருத்துவ அதிகாரியின் சாட்சியம் உட்பட குறுக்கு விசாரணையில் வெளிக்கொண்டு வரப்பட்ட பல முரண்பாடுகளை நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன.




அரச சட்டத்தரணியினதும் எதிராளி தரப்பில் எனது வாதத்தையும். மற்றும் இரண்டு பக்க எழுத்து மூலமான சமர்ப்பணத்தையும் கவனத்தில் கொண்ட கொழும்பு விசேட மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க தனது தீர்ப்பில் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எதிராளியிடமிருந்து சுயமாகப் பெறப்படவில்லையென்பதுடன், அரச தரப்பால் எதிராளிக்கு எதிராகச் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளில் ஒன்று கூட நிரூபிக்கப்படவில்லை எனத் தெரிவித்து, எதிராளியான ரமேஷ் நான்கு வழக்குகளிலிருந்தும் விடுதலை செய்யப்பட்டதாகத் தீர்ப்பு வழங்கினார்.

**நீர்கொழும்பு மேல் நீதிமன்றில்**

1. மின்சார நிலையைத்தைக் குண்டு வைத்துத் தகர்த்தெறியச் சதி
2. இராணுவ உயரதிகாரியை வேவு பார்த்தமை
3. கடும்சேதம் விளைவிக்கக் கூடிய மூன்று குண்டுகளை உடைமையில் வைத்திருந்தமை

ஆகிய மூன்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு தனித்தனியாக மூன்று குற்றச்சாட்டுப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்குகள் நீர்கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, கொழும்பு மேல் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட வாதங்களே நீர் கொழும்பு மேல் நீதிமன்றிலும் முன்வைக்கப்பட்டன. வத்தளை எலகந்தையில் அமைந்துள்ள மின்சார நிலையத்தைக் குண்டு வைத்து தகர்த்தெறியச் சதித்திட்டம் தீட்டிய எதிராளி மூன்று குண்டுகளை உடைமையில் வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட போதிலும் அரச சாட்சி சான்றுப் பொருளாக நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட வெடிகுண்டுகளை அடையாளப்படுத்தாமல் முரண்பாடான சாட்சியத்தை நீதிமன்றில் வழங்கினார். இதனையடுத்து அரச சட்டத்தரணி வழக்கைத் தொடர்ந்து நடத்தவில்லையென நீதிமன்றுக்கு அறிவித்தார்.

நீர்கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி மடவெல தனது தீர்ப்பில் அரச தரப்பால் எதிராளி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு களில் ஒரு குற்றச்சாட்டுக் கூட நிரூபிக்கப்படவில்லை என தீர்ப்பு வழங்கி ஜெயராம் இராமநாதனை மூன்று வழக்குகளிலிருந்தும் விடுதலை செய்தார். இறுதியில் ஏழு வழக்குகளில் இருந்தும் பத்து வருடங்களின் பின்னர் ரமேஷ் விடுதலை பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

*(அடுத்த வழக்கு அடுத்த வாரம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்.பிரகாஷ்



# வெடிப்புகள்

## இஸ்ரேல் உலகளாவிய வல்லரசாக தன்னை நிலைநிறுத்துகின்றதா?

ஹிஸ்புல்லா அமைப்பினர், தொடர்பாடல்களுக்காகப் பயன்படுத்திய பேஜர்கள், வோக்கிரோக்கிகள் ஒரே தடவையில் வெடித்துச் சிதறியிருக்கின்றன. இந்தத் தாக்குதலில் 32 பேர் கொல்லப்பட்டதுடன், 3 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் படுகாயங்களுக்கு உள்ளாகி மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். பொதுவாக ஜேம்ஸ் பொண்ட் படங்களில்தான் இதுபோன்ற மர்மங்கள் யதார்த்த நடைமுறைக்கு அப்பாற்பட்டு திரையில் தோன்றும். ஆனால், ஹிஸ்புலாவின் கண்களுக்கு முன்பாக தற்போது விரியும் காட்சிகள் பலநூறு ஜேம்ஸ்பொண்ட் படங்களுக்கு ஒப்பானவை. கற்பனைக்கும் அப்பாற்பட்ட தாக்குதல்கள் அவை.



### எதற்காக பேஜர்கள்?

பேஜர்கள் இணைய முடககங்களால் கட்டுப்படுத்தப்பட முடியாதவை. திறன்பேசிகளைப் போன்று அவற்றைக் கண்காணிப்பது அவ்வளவு இலகுவான விடயமல்ல. ஆதலால்தான், இந்த வகையிலான தொடர்பாடல் கருவிகளை இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களைத் திட்டமிடவும், தகவல்களைப் பரிமாறவும் ஹிஸ்புல்லா அமைப்பு பயன்படுத்தி வந்தது. ஹிஸ்புல்லாவின் போரியல் வியூகத்தில் (கெரில்லா) பேஜர்கள் மூலமாக தகவல் கடத்தல்கள் மிகப் பிரதானமானவை என்பதுடன் ஆபத்தானவையுமாகும். நீண்டகாலமாகவே இஸ்ரேலுக்குத் தலைவலியைக் கொடுத்துக் கொண்டிருந்த பேஜர்கள் மூலமாகவே, ஹிஸ்புல்லாவின் இதயத் துடிப்பை ஒருகணம் நிறுத்தியிருக்கின்றது இஸ்ரேல்.




### தாக்குதல் நடந்தது எப்படி?

பேஜரில் இஸ்ரேலின் மொசாட் அமைப்பினர் வெடிக்கும் 'போர்ட்' என்ற சாதனத்தை பொருத்தியுள்ளனர். அதில், 3 கிராம் அளவுக்கு வெடிமருந்தை நிரப்பியுள்ளனர். பேஜர்கள் உற்பத்தி செய்யப்பட்ட இடத்திலேயே இந்த வெடிமருந்து நிரப்பப்பட்டுள்ளது. கடவுச்சொல் (பாஸ்வேர்ட் அல்லது கோட்) வந்தவுடன் வெடிக்கும் வகையிலான சாதனமாக அந்தப் பேஜர்கள் அனைத்தும் மாற்றப்பட்டுள்ளன. இத்தகைய 5 ஆயிரம் பேஜர்களை தம் சட்டைப் பையில் காவிக்கொண்டு, 'இஸ்ரேலின் தற்கொலைதாரிகளாக' தம்மை அறியாமலேயே நடமாடித் திரிந்திருக்கின்றனர் ஹிஸ்புல்லாக்கள்.

கடந்த திங்கட்கிழமை இஸ்ரேலே உதறல் எடுக்கும்படியான தாக்குதலை நடத்தியிருந்தது ஹிஸ்புல்லா. சுமார் 2 ஆயிரம் கிலோமீற்றருக்கும் அப்பால் சென்று தாக்கக்கூடிய தொலைதூர ஏவுகணைகளால் இஸ்ரேலின் மத்திய பகுதியை ஹிஸ்புல்லா தாக்கியது. இஸ்ரேலின் தலைமேல் கத்தி தொங்கவிடப்பட்டாயிற்று என்று கருதப்பட்ட தருணத்தில்தான், தான் என்றோ பொருத்தி வைத்திருந்த அத்தனை வெடிபொருள்களையும் (பேஜர்) வெடிக்கச் செய்து 'என்ன நடக்கின்றது?' என்று ஊகிக்கமுடியாத நிலைக்கு ஹிஸ்புல்லாவைத் தள்ளியிருக்கின்றது இஸ்ரேல்.

### ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள்

ஹிஸ்புல்லாவின் தொடர்பாடல் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. அதேநேரம் ஹிஸ்புல்லாக்கள் காயமடைந்தும் உயிரிழந்தும் உள்ளனர். ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களாக, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஹிஸ்புல்லாக்களின் நிலைகள் மீது தீவிரமான வான் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றது இஸ்ரேல். ஹிஸ்புல்லாவின் அதீத எழுச்சியால் 2000ஆம் ஆண்டில் இஸ்ரேலின் வடக்குப் பகுதியில் இருந்து வெளியேறிய மக்களை மீண்டும் அங்கு குடியமர்த்துவதை இலக்காகக் கொண்டு தற்போது தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பேஜர்கள் கூட்டமாக வெடித்த இடங்களில் தற்போது வான் தாக்குதல்களை இஸ்ரேல் நடத்திக் கொண்டிருக்கின்றது. அவற்றை ஹிஸ்புல்லாகளின் முகாம்களாக இஸ்ரேல் கருதுகின்றது.



உலகப்போரில் முன்னெப்போதும் இல்லாத சம்பவம் இது. இஸ்ரேலின் பலம், போரியல் யுத்தி, அதன் தற்துணிவு இவற்றை ஒருசேர மெய்ப்பித்த இந்த நடவடிக்கையால் அமெரிக்கா உட்பட அத்தனை வல்லரசுகளும் வாயடைத்து நிற்கின்றன. அங்கீகாரம்தான் இல்லை. ஆனாலும் நான் வல்லரசு என்று உலக்க ஒலிக்கின்றது இஸ்ரேல்.










Photo X/@trbrtc

உலகப்போரில் முன்னெப்போதும் இல்லாத சம்பவம் இது. இஸ்ரேலின் பலம், போரியல் யுத்தி, அதன் தற்துணிவு இவற்றை ஒருசேர மெய்ப்பித்த இந்த நடவடிக்கையால் அமெரிக்கா உட்பட அத்தனை வல்லரசுகளும் வாயடைத்து நிற்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








நீங்களும்
உங்கள் கைவண்ணங்கள்,
ஆக்கங்களை அனுப்பலாம்.


உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555




**சி கம்சியா**
தரம் - 4A
யா/மானிப்பாய்
மகளிர் கல்லூரி



**K.யனுசன்**
தரம் - 8
கிளி/இராமநாதபுரம் மேற்கு
அ.த.க. பாடசாலை



**K.யனுசன்**
தரம் - 8
கிளி/இராமநாதபுரம் மேற்கு
அ.த.க. பாடசாலை



**கே.ஜனார்த்தன்**
தரம் -7,
யா/கொக்குவில்
இந்துக் கல்லூரி



**இ. திரிசன்**
தரம் - 1.B
யா/ சாவகச்சேரி இந்து
ஆரம்பப் பாடசாலை



**S. சிரார்த்தனன்**
தரம் -7D
யா/ மானிப்பாய் இந்துக்
கல்லூரி

## தன்னம்பிக்கையின் ஊற்று தந்தை



அன்னை தன் வயிற்றில் பத்து
மாதங்கள் நம்மைச் சுமந்தாலும், ஆயுள்
வரை நெஞ்சில் சுமப்பவர் தந்தை

வாழ்க்கைச் சக்கரத்தில் நாம் வசதியாக
வாழ்வதற்காக,
ஓயாமல் சுழலும் அன்புச் சக்கரம்.

'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை'
என்னும் ஔவையின் வாக்கில்
எவ்வளவு உண்மை
உழைப்பு, சேமிப்பு, தன்னம்பிக்கையின்
ஊற்று தந்தை என்றால் மிகையாகாது.

அப்பாவின் கரம் பிடித்து நடக்கையிலே,
கவலை அனைத்தும் மறந்து போகும்.

தன் குழந்தை தன்னைவிட
உயர்ந்த நிலைக்குச் செல்ல
வேண்டுமென்று தோளில்
சுமந்து உலகை காட்டும் உத்தமர்

எச்.கிருஷ்டிகா, நல்லூர்.



## நாய்

திருடர் வீட்டில் நுழையாமல்
தினமும் காவல் காக்கும்
வருவோர் தம்மை இனங்கண்டு
வாலை ஆட்டி வரவேற்கும்

வேட்டை ஆட என்றே
கூட்டிச் சென்றால் போதும்
மோப்பம் பிடித்தே கௌவும்
முகத்தில் களிம்பைக் காட்டும்

தம்பி தங்கையோடு
தானும் விளையாடிடும்
துள்ளிக் குதித்துப் பாயும்
எழிலாய் உறுமிக் காட்டும்

என்றும் தனக்கு உணவிடும்
எஜமான் தன்னைப் பணிந்திடும்
நன்றி என்னும் சொல்லுக்கு
நாங்கள் கூறும் ஜீவன்

ச.தேனுசன்,
தரம்-4
யாழ்ப்பாணக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org